+2 மாணவ மாணவிகளே...

உங்கள் எதிர்கால கல்வியை தேர்வு செய்ய அரிய வாய்ப்பு

# வரலாறு நாளிதழ்

நடத்தும்

இன்று நிறைவடைகிறது விரைந்து வாரீர்

முன்னணி கல்வி நிறுவனங்கள் பங்கு பெறும் பிரம்மாண்டமான



# கல்வி கண்காட்சி

அப்ளிகேஷன் முதல் அட்மிஷன் வரை

நாள் : ஏப்ரல் 8&9, 2023
இரண்டு நாட்கள்

இடம் : விஜய் பேலஸ் A/c
பேருந்து நிலையம், புதுக்கோட்டை

அனைவரும் வாரீர்!
அனுமதி இலவசம்!!

நடப்பு ஆண்டு +2 தேர்வு எழுதியுள்ள மாணவ கண்மணிகள் நேரில் வருவோரின் வருகையை மட்டும் பதிவு செய்து கொண்டு குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்படும் 3 நபர்களுக்கு மதர் தெரசா கல்வி நிறுவனம் சார்பில் லேப்டாப்கள் பரிசளிக்கப்படும்.

கண்காட்சியில் கலந்து கொள்ளும் அனைத்து மாணவ செல்வங்களுக்கும் வரலாறு நாளிதழ் வழங்கும் ஆச்சரியமூட்டும் அன்பளிப்பு காத்திருக்கிறது.


SR BLUE METALS®
SR புளு மெட்டல்ஸ்

பேக்கரி மஹராஜ்
புதுக்கோட்டை

blessed to serve
முத்துமீனாட்சி மருத்துவமனை
புதுக்கோட்டை

விஜய் நிறுவனங்கள்
புதுக்கோட்டை

ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ்
போன் : 04322 – 222 504, 222 505.

KMS HAKKIM
kalyana biriyani
PUDUKKOTTAI BRANCH
புதுக்கோட்டை


தொடர்புக்கு : 98420 98534 | 63833 51422 | 88381 73645 | 97154 54081

மேலும் விபரங்களுக்கு

www.varalaruu.com இணையதளத்தை பார்க்கவும்.






புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








ஞாயிறு ❖ ஏப்ரல். 09, 2023 புதுக்கோட்டை 6 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 184 ❖ ரூ.10


### தென் தமிழ்நாட்டிலேயே இதுவரை நடைபெறாத கல்வி கண்காட்சி

# பிரம்மாண்டமாக

## புதுக்கோட்டையில் நடைபெற்று வரும் புதுகை வரலாறு கல்வி கண்காட்சியை பார்வையிட ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கில் குவிந்த மாணவர்களால் கல்வியாளர்கள் மகிழ்ச்சி





**புதுக்கோட்டை, ஏப்.8–**

**புதுக்கோட்டையில் புதுகை வரலாறு நாளிதழ் நடத்தும் ஐந்தாம் ஆண்டு மாபெரும் கல்வி கண்காட்சி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள விஜய் பேலஸில் நேற்று தொடங்கியது.**

இக்கண்காட்சிக்கு பேக்கரி மஹராஜ் குழுமத்தின் நிர்வாக இயக்குனர் அருண் சின்னப்பா, விஜய் வணிக வளாகத்தின் நிர்வாக இயக்குனர் முருகானந்தம், முத்து மீனாட்சி மருத்துவமனை நிர்வாக இயக்குனர் டாக்டர் பெரியசாமி, கேஎம்எஸ் ஹக்கீம்நிர்வாகஇயக்குனர் சையது இப்ராஹிம், நெல்லுமண்டித்தெரு ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லரி உரிமையாளர் வெங்கடேஷ், புதுகை வரலாறு நாளிதழின் சென்னைபதிப்புதலைமை செய்தியாளர்காதர்உசேன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் சிறப்பு அழைப்பாளராக கவிஞர் தங்கம் மூர்த்தி கலந்து கொண்டு பேசியது, கண்காட்சியின் முதல் நாளிலேயே ஒரு கல்லூரியின் நடவடிக்கையும், தரத்தையும் கவனித்த ஒரு மாணவி விண்ணப்பம் பெற்றுக்கொண்டுசேர்ந்து விட்டார்.காரணம்இன்று தமிழ்நாட்டில் என்ன சூழ்நிலை இருக்கிறது என்று பார்த்தால், தேர்வு முடிவுகள் வருமுன்னே பல கல்லூரிகளில் சேர்க்கை முடிந்து விடுகிறது. அதனால் இப்போது நடக்கிற கல்வி கண்காட்சியை தவறவிட்டால் வாய்ப்பு கிடைப்பது அரிது, முதல் நாள் என்பதால் அனைத்து கல்லூரிகளில் விளம்பரத்தின் துண்டு பிரசுரங்களை வாங்கிக் கொண்டு அனைத்தையும் வீட்டில்வரிசையில்அடுக்கி வைத்து,பெற்றோர்களுடன் ஆலோசனை செய்து ஒரு மனதாக முடிவெடுங்கள் என்றார்.

இக்கண்காட்சியில் டாக்டர்ஸ் காலேஜ் ஆப் நர்சிங், காவேரி கல்வி நிறுவனம், தக்ட்சீலா பல்கலைகழகம், மதர்தெரேசாபொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி, தனலெட்சுமி சீனிவாசன் கல்வி நிறுவனங்கள்,பாவைகல்வி நிறுவனங்கள், ஆர்விஎஸ் கல்வி நிறுவனங்கள், டீம் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை, ஸ்ரீ ராஜராஜன் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரி, நமது அறிவியல் தமிழ் மாத இதழ், வித்யா விகாஸ் கல்வி நிறுவனங்கள்,என்.எச்.ஐ.டி கல்வி நிறுவனம், ஸ்ரீ பாரதி கல்வி நிறுவனங்கள், மூகாம்பிகை பொறியியல் கல்லூரி, ஸ்டுடியோ 7, சுதர்சன் பொறியியல் கல்லூரி, ஸ்ரீ ராஜமீனாட்சி பேப்பர்ஸ், சூர்யா பொறியியல் கல்லூரி, இமயம்கல்விநிறுவனங்கள், முத்துமீனாட்சி இன்ஸ்டிடியூட் ஆப் அலைட் ஹெல்த் சயின்ஸ், அய்மான் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, எம்.ஆர்.எம் இண்டர்நேஷனல் பள்ளி, பி.எஸ்.வி பாலிடெக்னிக் கல்லூரி, செந்தூரான் பொறியியல் கல்லூரி, கஸ்தூரி கல்வி நிறுவனம், பெரியார் மணியம்மை பல்கலைகழகம், எஸ்.எஸ். எம் பொறியியல் கல்லூரி, ஸ்ரீவெங்கடேஷ்வராகல்வி நிறுவனங்கள், ஹர்ஷா நிறுவனங்கள், மன்ஜூ எடுகேஷனல் சர்வீஸ், சவீதா கல்வி நிறுவங்கள், சுதர்சன் வித்யா மந்தீர் பள்ளி,ஓவர்சீஸ்மெடிக்கல் ஸ்டடிஸ் உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள்பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் புதுக்கோட்டை, ஆலங்குடி, அறந்தாங்கி, கறம்பக்குடி, திருமயம், கந்தர்வக்கோட்டை, இலுப்பூர், விராலிமலை, கீரனூர்,பொன்னமராவதி, ஆவுடையார்கோவில், மீமிசல்,திருச்சி,தஞ்சாவூர், சிவகங்கை போன்ற பல்வேறு இடங்களில் இருந்துஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகள், பெற்றோர்கள், சமூக ஆர்வலர்கள், கல்வியாளர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின் முன்னதாக புதுகை வரலாறு நாளிதழின் நிறுவனர் மற்றும் ஆசிரியர் சு.சிவசக்திவேல் வரவேற்றார். முடிவில் ஆலோசகர் கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார். இன்று நடைபெறும் நிகழ்வில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படவுள்ள மாணவ, மாணவிகளுக்கு 3 லேப்டாப், பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய சமூக ஆர்வர்களுக்கான விருதுகள், நினைவுப்பரிசுகள் வழங்குதல் போன்ற எண்ணற்ற நிகழ்வுகள் நடைப்பெறவுள்ளன.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டுமில்லாது தென் தமிழகத்திலேயே இது போன்ற ஒரு கல்வித் திருவிழா இதுவரை எந்த நிறுவனம்நடத்தியதில்லை என்றும் இனிவரும் காலத்திலும் புதுகை வரலாறை போல் எவரும் நடத்தி விட முடியாது என்றும் கண்காட்சியை பார்வையிட வந்திருந்த மாணவர்களும் அவர்களின் பெற்றோரும் சமூக ஆர்வலர்களும் கருத்து தெரிவித்தனர்.

# தமிழ் புத்தாண்டு புதிய திட்டங்களின் தொடக்கமாக அமையும் : பிரதமர் நரேந்திர மோடி பேச்சு



**சென்னை, ஏப்.9–**

**நேற்று சென்னைக்கு வருகை தந்து "வணக்கம் தமிழ்நாடு" என்று தமிழில் உரையை தொடங்கிய பிரதமர் மோடி தமிழ் புத்தாண்டு புதிய திட்டங்களின் தொடக்கமாக அமையும் என தெரிவித்துள்ளார்.**

பிரதமர் நரேந்திர மோடி 2 நாள் பயணமாக ரூ.5 ஆயிரம் கோடி மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைப்பதற்காக நேற்று சென்னை வந்தார். முன்னதாக தெலுங்கானாவில் ரூ.11,300 கோடி மதிப்பிலான உட்கட்டமைப்பு மற்றும் இணைப்பு உள்ளிட்ட வளர்ச்சி திட்ட பணிகளுக்கான தொடக்க விழா மற்றும் அடிக்கல் நாட்டும் விழாவில் பங்கேற்று, செகந்திராபாத் - திருப்பதி வந்தே பாரத் எக்ஸ்பிரெஸ் ரெயிலில் ஆய்வு மேற்கொண்டு, ரெயில் சேவையை கொடியசைத்துதொடங்கி வைத்தார்.

பின்னர்ஐதராபாத்தில் இருந்து சென்னை விமான நிலையத்துக்கு பிற்பகல் வருகை தந்த பிரதமருக்கு விமான நிலையத்தில் தமிழக கவர்னர் ஆர்.என்.ரவி, முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர்கள் உள்பட பலர் வரவேற்றனர். விமான நிலையத்தில் பிரதமர் மோடியை வரவேற்ற முதல்வர் முக. ஸ்டாலின் அவருக்கு 'தமிழ்நாட்டில் காந்தியின் பயணம்'என்றபுத்தகத்தை பரிசாக அளித்து வரவேற்றார்.

இதனைத்தொடர்ந்து, சென்னை விமான நிலையத்தில் ரூ.2,467 கோடி மதிப்பில் 2.36 லட்சம் சதுர மீட்டரில் புதிதாக கட்டப்பட்ட ஒருங்கிணைந்த புதிய விமான நிலைய முனையத்தை பிரதமர் மோடி திறந்து வைத்துப் பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியின் போது பிரதமர் மோடியுடன், முதல்வர் மு.க.ஸ்டாலின், கவர்னர் ஆர்.என்.ரவி, விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர்ஜோதிராதித்ய சின்ஹா, மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் ஆகியோர் இருந்தனர்.


பின்னர் சென்னை விமான நிலையத்தில் இருந்து ஹெலிகாட்பர் மூலம் புறப்பட்ட பிரதமர் மோடி அடையாறு ஐஎன்எஸ் கடற்படைத்தளம் சென்றடைந்தார். இதனைத்தொடர்ந்து, அடையாறு ஐஎன்எஸ் கடற்படை தளத்தில் இருந்து பிரதமர் மோடி காரில் சென்னை சென்ரல்ரெயில்நிலையம் புறப்பட்டு சென்றார்.

அங்குசென்றபிரதமர், சென்னை சென்ரல் ரெயில் நிலையத்தில் இருந்து சென்னை - கோவை இடையேயான 'வந்தே பாரத்' ரெயிலை கொடியசைத்துதொடங்கி வைத்தார். பின்னர் அங்கிருந்து சென்னை மெரினா கடற்கரை காமராஜர் சாலையில் உள்ள விவேகானந்தர் இல்லத்திற்கு சென்ற பிரதமர் விவேகானந்தர் இல்லத்தில் நடைபெற்ற மயிலாப்பூர்ராமகிருஷ்ண மடத்தின் 125வது ஆண்டு விழாவில் பிரதமர் மோடி பங்கேற்று அங்குள்ள விவேகானந்தர் சிலைக்கு மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் பிரதமர் மோடிக்கு நினைவு பரிசாக விவேகானந்தர் சிலை வழங்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து சென்னை பல்லாவரம் அல்ஸ்டாம் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில் பிரதமர் மோடி பங்கேற்றுதமிழ்நாட்டிற்கு நெடுஞ்சாலை,ரெயில்வே தொடர்பான பல்வேறு நலத்திட்ட பணிகளை பிரதமர்மோடிதொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் "வணக்கம் தமிழ்நாடு" என்று தமிழில் உரையை தொடங்கிய பிரதமர் மோடி பேசியதாவது, தமிழ்நாட்டிற்கு வருவது எனக்கு எப்போதுமே மகிழ்ச்சிதான். தேசபக்தி, தேசிய உணர்வு ஆகியவற்றின் மையமும் தமிழ்நாடு தான். தமிழ்நாட்டின் கலாசார மையமாகமதுரைஉள்ளது. இந்தியாவின் வளர்ச்சிக்கு தமிழ்நாடும் உதவுகிறது. தமிழ்நாடு வளர்ந்தால் இந்தியா வளரும். தமிழ்நாடு வளரும்போது இந்தியா வளர்கிறது. தற்போது தொடங்கி வைக்கப்பட்டுள்ள புதிய திட்டங்கள் புத்தாண்டில் தமிழ்நாடு மக்களுக்கு பயன் தர உள்ளன. தமிழ் புத்தாண்டு புதிய திட்டங்களின் தொடக்கமாக அமையும். டிஜிட்டல் பரிவர்த்தனையில் நாம் முதல் இடத்தில் உள்ளோம். மலிவு விலையில் மக்களுக்கு இணையதள சேவை வழங்கப்படுகிறது. சென்னை விமான நிலையத்தின் புதிய முனையம்தமிழ்நாட்டின் கலாசாரத்தை வெளிப்படுத்தும். தற்போது துவக்கி வைக்கப்பட்ட திட்டங்களால்சென்னை, கோவை, மதுரை பயன்பெறும்' என்றார்.

## "மாநில வளர்ச்சி திட்டங்களால்தான் கூட்டாட்சித் தத்துவம் வளரும்" பிரதமர் மோடியின் சென்னை நிகழ்வில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு




**சென்னை , ஏப்.8–**

தென் தமிழகத்திற்கு வந்தே பாரத் ரயிலை இயக்க வேண்டும் என்றும் தமிழகத்தின் ரயில்வே, சாலை, மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று பிரதமரிடம் முதல்வர் கோரிக்கை வைத்தார்.

சென்னை - பல்லாவரம் அல்ஸ்தம் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடி ரூ.3,700 கோடி மதிப்பிலான சாலைத் திட்டங்களுக்கு நேற்று அடிக்கல் நாட்டினார். இதன்படி, தேசிய நெடுஞ்சாலை 747-ல் சாலைத் திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், மதுரையில் கட்டப்பட்டுள்ள 7.3 கி.மீ. நீள மேல்மட்டச் சாலை மற்றும் தேசிய நெடுஞ்சாலை 785-ன் 24.4 கி.மீ. நீள 4 வழிச்சாலை ஆகியவற்றை தொடங்கி வைத்தார். இதனைத் தவிர்த்து, தாம்பரம்-செங்கோட்டை இடையிலான விரைவு ரயில், திருத்துறைப்பூண்டி - அகஸ்தியம் பள்ளி இடையிலான ரயிலை பிரதமர் தொடங்கி வைத்தார். மேலும், திருத்துறைப்பூண்டி - அகஸ்தியம் பள்ளி இடையே 37 கி.மீ.

5ம் பக்கம் பார்க்க









# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# "கலைஞர் எழுதுகோல் விருது" தகுதியுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் : தமிழக அரசு

சென்னை, ஏப்.9–

2022ம் ஆண்டுக்கான கலைஞர் எழுதுகோல் விருதுக்கு தகுதியுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் என தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒவ்வோர் ஆண்டும் முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த தினமான ஜுன் 3ம் நாளன்று, ஒரு சிறந்த இதழியலாளருக்கு "கலைஞர் எழுதுகோல் விருது" வழங்கி கௌரவிக்கப்படும் என ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வகையில், 2022ம் ஆண்டுக்கான இவ்விருதுக்குரிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இவ்விருதில் ரூபாய் ஐந்து இலட்சம் பரிசுத் தொகையுடன் பாராட்டுச் சான்றிதழும் அடங்கும்.



கலைஞர் எழுதுகோல் விருதிற்கான தகுதிகள் பின்வருமாறு, விண்ணப்பதாரர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவராகவும், தமிழ் இதழியல் துறையில் குறைந்தபட்சம் பத்து ஆண்டுகளாக தொடர்ந்து பணிபுரிகின்றவராகவும் இருக்க வேண்டும். பத்திரிகைப் பணியை முழுநேரப் பணியாகக் கொண்டிருக்கவேண்டும். இதழியல் துறையில் சமூக மேம்பாட்டிற்காகவும், விளிம்புநிலை மக்களின் மேம்பாட்டிற்காகவும் பங்காற்றியிருக்க வேண்டும். பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் விண்ணப்பதாரரின் எழுத்துகள் பொதுமக்களிடையே நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். விண்ணப்பதாரர் நேரடியாகவோ, மற்றொருவர் பரிந்துரையின் அடிப்படையிலோ பணிபுரியும் நிறுவனத்தின் பரிந்துரையின் பேரிலோ விண்ணப்பங்களை அனுப்பலாம். இதற்கென அரசால் அமைக்கப்பட்டுள்ள தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.மேற்காணும் தகுதிகளைக் கொண்ட விண்ணப்பங்கள், விரிவான தன் விவரங்கள் மற்றும் அவற்றுக்குரிய ஆவணங்களுடன் இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை 600009 என்ற முகவரிக்கு ஏப்ரல் 30ம் தேதிக்குள் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு முழுவதும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் பற்றாக்குறை உள்ளது : அமைச்சர் மா.சுப்ரமணியன்

சென்னை, ஏப்.9–

தமிழ்நாடு முழுவதும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் பற்றாக்குறை உள்ளதாக தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் நேற்று சென்னை கண்ணகி நகரில் சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் காப்பீடு திட்ட பயனாளிகள் பதிவு செய்யும் முகாமை துவக்கி வைத்தார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர் கூறியதாவது, தமிழ்நாடு



முழுவதும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர்கள் பற்றாக்குறை உள்ளது. 25,000 மருத்துவர்கள் பதிவு செய்துள்ள நிலையில், 1,021 மருத்துவர்கள் பணி நியமனம் செய்யப்பட உள்ளனர். 4,308 பேர் பணியமர்த்தப்பட்டு வருகிறார்கள். 708 நகர்ப்புற நல வாழ்வு மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. சித்த மருத்துவ பல்கலைக் மசோதாவை ஆளுநர் முடக்கி வைத்துள்ளதால் நிதி ஒதுக்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும் பேசிய அவர், தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் மாஸ்க் அணிவது ஏப்ரல் 1ம் தேதி முதல் கட்டாயமாக்கப் பட்டுள்ளது. தமிழகத்தில் பொது இடங்களில் தேவைப்பட்டால் மாஸ்க் அணிவது கட்டாயமாக்கப்படும். கொரோனா பாதித்தோர் மருத்துவர்களின் ஆலோசனைப்படியே மருந்து எடுத்துக்கொள்ள வேண்டும் என கூறினார்.







▶ விருதுநகர் செந்திக்குமார் நாடார் கல்லூரியில் நேற்று மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பாக அனைத்து கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியை விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் முன்னிலையில், மாவட்ட கலெக்டர் வீ.ப.ஜெயசீலன் துவக்கி வைத்து உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மாநில ஒருங்கிணைப்பாளர் அழகிரிசாமி, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரெங்கசாமி, விருதுநகர் நகர்மன்றத் தலைவர் மாதவன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜகுரு உட்பட அரசு அலுவலர்கள், மற்றும் மாணவ, மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.



▶ காரைக்கால் கடைத்தெரு ஸ்ரீ அருள்மிகு மாரியம்மன் கோயில் 43- ஆம் ஆண்டு புத்தாண்டு சிறப்பு நிகழ்ச்சி அழைப்பிதழை சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.எச். நாஜிம்,விழா குழுவினர்கள் வழங்கிய போது .

# கோடை உழவு செய்து மக்காச்சோள படைப்புழுவை கட்டுப்படுத்தலாம் என வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை

புதுக்கோட்டை, ஏப்.9–

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது கோடையில் பெறப்படும் மழையினைப் பயன்படுத்தி கோடை உழவு மேற்கொண்டு விவசாயிகள் பயனடைய வேண்டும் என புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மா.பெரியசாமி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பங்குனி - சித்திரைப் பட்டங்களில் பெறப்படும் கோடை மழையினைப் பயன்படுத்திக் கோடை உழவு மேற்கொள்வது மிகவும் அவசியமாகும். ஏனெனில், நமது பூமி வெப்ப மண்டலமாக இருப்பதால் கோடையில் மேல் மண் அதிக வெப்பமடைகிறது. இந்த வெப்பம் கீழ்ப்பகுதிக்குச் செல்லும்பொழுது நிலத்தடி நீர் ஆவியாகி வெளியேறிவிடும். மேல் மண்ணை உழவு செய்து ஒரு புழுதிப் படலம் அமைத்துவிட்டால் விண்வெளிக்கும் வேர்சூழ் மண்டலத்திற்கும் தொடர்பு அறுந்துவிடும். இதனால் நிலத்தில் உள்ள ஈரம் ஆவியாக விடாமல் இப்புழுதிப் படலம் தடுத்து விடும்.

'சித்திரை மாதத்துப் புழுதி பத்தரை மாற்றுத் தங்கம்" என்பது பழமொழி.



கோடை மழையின் ஈரத்தைப் பயன்படுத்தி நிலத்தை நன்கு உழவு செய்வதால் நன்மைகள் பல கிடைக்கும். கோடை உழவு செய்வதால் மேல் மண் துகள்களாகிறது. இதனால், நிலத்தில் நீர் இறங்கும் திறன் அதிகரிக்கும். கோடை உழவு செய்வதால் மண்ணில் நல்ல காற்றோட்டம் கிடைப்பதனால் மண்ணில் நுண்ணுயிரிகளின் செயல்பாடு அதிகமாகி மண்வளம் பெருகும். வயலிலுள்ள கோரை போன்ற களைகள், கோடை உழவு செய்வதனால் மண்ணின் மேற்பரப்புக்குக் கொண்டுவரப்பட்டு சூரிய வெப்பத்தில் நன்கு காய்ந்து கட்டுப்படுத்தப்படுகிறது. ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மையில் கோடை உழவு செய்வது மிகவும் முக்கிய தொழில்நுட்பமாகும்.

கோடை உழவு செய்வதனால் நிலத்தினடியில் உள்ள கூண்டுப் புழுக்கள் மற்றும் தீமை செய்யும் பூச்சிகள் வெளியில் கொண்டுவரப்பட்டு அழிக்கப்படுகிறது. மிக முக்கியமாக மக்காச்சோளத்தை தாக்கும் அமெரிக்க படைப்புழுவினை கட்டுப்படுத்திட கோடை உழவு மிகவும் சிறந்தது. இதனால் வரும் பருவத்தில் பூச்சி நோய்த் தாக்குதல் பெருமளவு குறைகிறது.

கோடை உழவினைச் சரிவிற்குக் குறுக்கே உழவு செய்து மண் அரிப்பினை தவிர்க்கலாம். கோடை உழவு செய்யாத நிலத்தில் நீர் வேகமாக வழிந்தோடி மண் அரிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. வயல்வெளிகளில் பெய்யும் மழை நீரை சேமிப்பதில் கோடை உழவு முக்கிய பங்கு வகிக்கிறது.

இவ்வாறு பல நன்மைகள் கோடை உழவினால் ஏற்படுவதால் 'கோடை உழவு கோடி நன்மை" எனக்கூறப்படுகிறது. எனவே, புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் கோடையில் பெறப்படும் மழையினைப் பயன்படுத்தித் தங்களது நிலங்களில் மழை நீரை சேமித்திடவும், பூச்சி நோய் ஆகியவற்றை கட்டுப்படுத்திடவும் கோடை உழவு செய்து பயன்பெறுமாறு புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் மா.பெரியசாமி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பு சார்பில் கடையநல்லூரில் உறுப்பினர் சேர்க்கும் முகாம்

தென்காசி, ஏப்.9–

தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பு சார்பில் கடையநல்லூரில் உறுப்பினர் சேர்க்கும் முகாம் நடைபெற்றது.

கடையநல்லூர் கீழத்தெருவில் நாடார் சமுதாயத்திற்கு பாத்தியப் பட்ட ஸ்ரீமன் நாராயண சாமி கோவில் மண்டபத்தில் வைத்து தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பு சார்பில் வடக்கு மாவட்ட செயலாளர் முருகன் தலைமையில் கடையநல்லூர் குருசாமி, முருகன், ரமேஷ், பெரியசாமி, வேல்சாமி ஆகியோர் முன்னிலையில் உறுப்பினர்கள் சேர்க்கை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பின் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார், பொருளாளர் சுப்பிரமணியன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சியை தொடங்கி வைத்து அகரக்கட்டு லூர்து



நாடார் பேசும் போது, நாடார் சமுதாய மக்கள் வாழ்கின்ற ஊரெங்கும் புதிய நிர்வாகிகளை நியமித்து அவர்கள் மூலமாக வீடு வீடாக சென்று புதிய உறுப்பினர்களை சேர்த்து வருகிறோம். இளைஞர்கள் வாட்ஸ்அப் குரூப்பில் அல்லது முகநூலில் மட்டுமே சமுதாயத்தை பற்றி பேசி வருகிறார்கள். நம் சமுதாய பெரியவர்களும் இளைஞர்களும் அரசியல் கட்சிகளுக்கு உறுப்பினர்கள் சேர்க்க காட்டும் ஆர்வம் நம் சமுதாய சங்கங்களுக்கு சமுதாய அமைப்புகளுக்கு உறுப்பினர் சேர்க்க ஆர்வம் காட்டுவதில்லை.

இளைஞர்கள் அவரவர் வாழுகின்ற ஊர்களில் அல்லது அருகில் இருக்கின்ற ஊர்களில் நம் சமுதாய மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். தமிழ்நாடு நாடார் உறவின் முறைகள் கூட்டமைப்பு சமுதாய ஒற்றுமைக்காக எடுக்கின்ற அனைத்து முயற்சிகளுக்கும் உங்கள் ஊரின் சார்பாக இணைந்து செயல்பட வாருங்கள் என்று அழைக்கிறோம் என கூறினார். இந்நிகழ்ச்சியில் ஊர் பெரியவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# தமிழகத்தின் டெல்டா பகுதியில் அறிவிக்கப்பட்டிருந்த மூன்று நிலக்கரி சுரங்கங்களுக்கான டெண்டரை ரத்து செய்து மத்திய அரசு அறிவிப்பு

புதுடெல்லி, ஏப்.9–

தமிழகத்தின் டெல்டா பகுதியில் அறிவிக்கப்பட்டிருந்த மூன்று நிலக்கரி சுரங்கங்களுக்கான டெண்டரை ரத்து செய்வதாக மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

நிலக்கரி அமைச்சகம் கடந்த மாதம் (மார்ச்) 29ம் தேதி, நாடு முழுவதும் 101 வட்டாரங்களில் நிலக்கரி எடுப்பதற்கான ஏல அறிவிப்பை வெளியிட்டது. இந்த அறிவிப்பில் தமிழகத்தை சேர்ந்த 3 பகுதிகளும் இடம்பெற்று இருந்தன. அதன்படி, அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் வட்டத்தில் மைக்கேல்பட்டி, கடலூர் மாவட்டம் புவனகிரி வட்டத்தில் சேத்தியாத்தோப்பு கிழக்கு பகுதி, தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு வட்டத்தில் வடசேரி ஆகிய 3 பகுதிகள் இடம்பெற்று இருந்தன. இந்த 3 பகுதிகளும் காவிரி டெல்டா பகுதிகள் ஆகும்.

ஏற்கனவே, தமிழகத்தில் காவிரி டெல்டா பகுதிகள், பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்டு உள்ளன. எனவே, இந்த இடத்தில் விவசாய பணிகளை தவிர வேறு எந்த வேலைகளையும் மேற்கொள்ள முடியாது. இந்நிலையில், இந்த




இடங்களில் எப்படி நிலக்கரி எடுக்கும் பணியை மேற்கொள்ள முடியும்? என்று டெல்டா மாவட்ட விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். பல்வேறு அரசியல் கட்சித்தலைவர்களும் மத்திய அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து உள்ளார். தமிழகஅரசும் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இவ்விவகாரம் தொடர்பாக கடந்த புதன்கிழமை அன்று நடைபெற்ற சட்டசபையில் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. தீர்மானத்தில் பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், டெல்டா பகுதிகளில் நிலக்கரி சுரங்கங்கள் அமைக்க எந்த காலத்திலும் அனுமதி கிடையாது என்று கூறியிருந்தார்.

இந்நிலையில், டெல்டா பகுதிகளில் நிலக்கரி சுரங்கம் அமைக்கும் திட்டம் ரத்து செய்யப்படுவதாக மத்திய அமைச்சர் பிரகாலத் ஜோஷி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக பிரகலாத் ஜோஷி தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை என்னை பெங்களூருவில் அவசர அவசரமாக சந்தித்தார். காவிரி டெல்டாவின் மூன்று சுரங்கங்களுக்கான ஏலத்தை ரத்து செய்யுமாறு கோரினார். கூட்டாட்சி தத்துவத்தின் மாண்பைக் காக்கவும், மக்கள் நலனைக் கருத்தில் கொண்டும் நிலக்கரி சுரங்க ஏலத்திலிருந்து அந்த குறிப்பிட்ட 3 சுரங்கங்களை நீக்குமாறு உத்தரவிட்டுள்ளேன்" என்று கூறியுள்ளார்.

இதனைத்தொடர்ந்து இதற்கு நன்றி தெரிவித்துள்ள தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தனது ட்விட்டர் பக்கத்தில், "விவசாயிகளின் நலனுக்கு முக்கியத்துவம் கொடுத்து என்றென்றும் அவர்களுடன் துணை நிற்பவர் நமது பிரதமர் நரேந்திர மோடி. தமிழக விவசாயிகள் மற்றும் தமிழக பாஜக சார்பாக அவருக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். மத்திய அமைச்சர் பிரகலாத் ஜோஷி நமது கோரிக்கையை ஏற்று தமிழகத்தின் டெல்டா பகுதியில் அறிவிக்கப்பட்டிருந்த மூன்று நிலக்கரி சுரங்கங்களுக்கான டெண்டரை ரத்து செய்வதாக அறிவித்துள்ளது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது" என்று கூறியுள்ளார்.

# மருத்துவராக வேண்டும் என்ற நோக்கத்துடன் சேரும் மாணவ, மாணவியரை பயிற்சி மையங்கள் மரணத்தை நோக்கி அனுப்பக் கூடாது – அன்புமணி ராமதாஸ் கண்டனம்

சென்னை, ஏப்.9–

மருத்துவராக வேண்டும் என்ற நோக்கத்துடன் சேரும் மாணவ, மாணவியரை பயிற்சி மையங்கள் மரணத்தை நோக்கி அனுப்பக் கூடாது என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கடலூர் மாவட்டம் நெய்வேலியைச் சேர்ந்த மாணவி நிஷா தற்கொலை செய்து கொண்டதற்கு நீட் தேர்வு குறித்த அச்சம் ஒரு காரணம் என்றால், தனியார் பயிற்சி நிறுவனம் ஏற்படுத்திய மன உளைச்சல் தான் அதை விட முக்கியக் காரணம் என்று தெரியவந்துள்ளது. நீட் பயிற்சி அளிப்பதாக லட்சக்கணக்கில் கட்டணம் வசூலிக்கும் நிறுவனங்கள், மாணவர்களை தற்கொலைக்கு தள்ளுவது கண்டிக்கத்தக்கது.

கடலூர் மாவட்டம் நெய்வேலி நகரியத்தைச் சேர்ந்த என்.எல்.சி ஒப்பந்தத் தொழிலாளியான உத்திராபதியின் மகள் நிஷா, கடந்த ஆண்டு நீட் நுழைவுத்தேர்வை எழுதியும் மருத்துவப் படிப்பில் சேர முடியவில்லை. நடப்பாண்டில் மீண்டும் நீட் தேர்வு எழுதும் நோக்கத்துடன், நெய்வேலி இந்திரா நகரில் உள்ள தனியார் பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று வந்தார். அடுத்த மாதம் நடைபெறவுள்ள நீட் தேர்வுக்காக அவர் தயாராகி வந்த நிலையில் கடந்த புதன்கிழமை வடலூரில் தொடர்வண்டி முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார். அவரது தற்கொலைக்கு நீட் தேர்வு குறித்த அச்சத்தையும் கடந்து, தனியார் பயிற்சி மையம் ஏற்படுத்திய மன உளைச்சல் தான் முதன்மைக் காரணம் என்று இப்போது தெரியவந்திருக்கிறது.

நிஷா படித்து வந்த தனியார் பயிற்சி மையத்தில் பயிலும் மாணவர்களுக்கு அந்த பயிற்சி மைய அளவில் ஓர் தேர்வு நடத்தப்பட்டுள்ளது. மொத்தம் 720 மதிப்பெண்களுக்கு நடத்தப்பட்ட அந்தத் தேர்வில் 400 மற்றும் அதற்கும் கூடுதலாக மதிப்பெண் எடுத்த மாணவ, மாணவியர் மட்டும் தனிக்குழுவாக அறிவிக்கப் பட்டு, அவர்களுக்கு தனியாக பயிற்சி வழங்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

அந்தத் தேர்வில் நிஷா 399 மதிப்பெண்கள் மட்டுமே எடுத்ததாகக் கூறப்படுகிறது. அதனால், அவர் தனிப்பயிற்சிக் குழுவில்



சேர்க்கப்படவில்லை என்று தெரிகிறது. அதுமட்டுமின்றி, 400க்கும் குறைவாக மதிப்பெண்களை பெற்ற நிஷா உள்ளிட்டோர் நடப்பாண்டு நீட் தேர்வில் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பில்லை என்று பயிற்சி மைய ஆசிரியர்களும், நிர்வாகிகளும் கூறி வந்ததால் நிஷா மன உளைச்சல் அடைந்ததாகவும், அது தான் மாணவி நிஷாவின் தற்கொலைக்கு முதன்மையான காரணம் என்று பல்வேறு தரப்பிலும் கூறப்படுகிறது.

தற்கொலை செய்து கொண்ட மாணவி நிஷாவின் பெற்றோரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்தேன். அப்போது மாணவி நிஷாவின் தற்கொலைக்கான காரணங்களை அவர்களிடமும் உறுதி செய்து கொண்டேன். தனியார் பயிற்சி மையத்தின் இத்தகைய அணுகுமுறை காரணமாக நடப்பாண்டில் மட்டும் நெய்வேலி நகரியத்தில் மூன்று பேர் தற்கொலை செய்து கொண்டதாக தெரிகிறது.

தமிழக மாணவ, மாணவியருக்கு நீட் தேர்வு என்பது முற்றிலும் புதிதானது ஆகும். அதை எழுத தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் தான் மாணவ, மாணவியர் தனியார் பயிற்சி மையங்களில் சேர்கின்றனர். பயிற்சி மையத்தில் நடத்தப்படும் தேர்வுகளில் மாணவ, மாணவியரில் ஒரு பிரிவினர் 400க்கும் கூடுதலான மதிப்பெண்களும், இன்னொரு பிரிவினர் 400க்கும் குறைவான மதிப்பெண்களும் எடுத்திருந்தால், குறைந்த மதிப்பெண் பெற்ற மாணவர்களின் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவதும், அவர்களுக்கு சிறப்புப் பயிற்சி வழங்குவதும் தனிப்பயிற்சி மையத்தின் கடமை. அதற்காகத் தான் அவர்களிடமிருந்து பயிற்சி மையங்கள் லட்சக்கணக்கில் கட்டணம் வசூலிக்கின்றன.

அதற்கு மாறாக, குறைந்த மதிப்பெண் எடுத்ததற்காக மாணவர்களை சிறுமைப்படுத்தும் நோக்குடன் நடந்து கொள்வதும், மன உளைச்சலை ஏற்படுத்துவதும் மன்னிக்க முடியாதவை.

மருத்துவராக வேண்டும் என்ற நோக்கத்துடன் சேரும் மாணவ, மாணவியரை பயிற்சி மையங்கள் மரணத்தை நோக்கி அனுப்பக் கூடாது. மாணவி நிஷாவின் தற்கொலைக்கான காரணம் குறித்து தமிழக அரசு விசாரணை நடத்தி, தவறு செய்தவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். தனிப்பயிற்சி மையங்களை ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளை வகுத்து செயல்படுத்த வேண்டும். பயிற்சி மையங்களும் மாணவ, மாணவியரின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு செயல்பட வேண்டுமே தவிர, அவர்களை மனஉளைச்சலுக்கு ஆளாக்கி தற்கொலைக்கு தூண்டும் செயல்களில் ஒருபோதும் ஈடுபடக் கூடாது.

இவை அனைத்துக்கும் மேலாக, மாணவ, மாணவியரின் தற்கொலைக்கு நிரந்தரத் தீர்வு காணும் நோக்கத்துடன், விரைவாக செயல்பட்டு நீட் விலக்கு சட்டத்திற்கு நடப்பாண்டிற்கான மருத்துவ மாணவர் சேர்க்கைக்கு முன்பாக தமிழக அரசு ஒப்புதல் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# திருவாரூர் : மருத்துவம் படிக்காமல் சிகிச்சை அளித்து வந்த 10 போலி மருத்துவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைப்பு

திருவாரூர், ஏப்.9-

திருவாரூரில் மருத்துவம் படிக்காமல் சிகிச்சை அளித்து வந்த 10 போலி மருத்துவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

தமிழகம் முழுவதும் போலி மருத்துவர்களை கண்டறியும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஒருபகுதியாக திருவாரூர் மாவட்ட எஸ்.பி சுரேஷ்குமார் உத்தரவின்பேரில் நன்னிலம், முத்துப்பேட்டை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தனிப்படை போலீசார் அதிரடி சோதனை மேற்கொண்டனர். இந்த சோதனையில் முறையாக மருத்துவம் படிக்காமல் பொதுமக்களுக்கு மருந்து மாத்திரைகள் வழங்கியும், ஊசி போட்டும் சிகிச்சை அளித்து வந்த போலி மருத்துவர்களை கண்டறிந்தனர்.

இது தொடர்பாக மாப்பிள்ளைகுப்பம் பகுதியைச் சேர்ந்த செந்தில், கொல்லுங்மாங்குடியைச் சேர்ந்த சிவக்குமார், பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த மாரியப்பன், நாச்சிகுளம் கல்யாண சுந்தரம், இடும்பாவனம் பகுதியை சேர்ந்த ராஜேந்திரன், பெருகவாழ்ந்தான் பகுதியை சேர்ந்த சிவகுருநாதன், சேகரை கிராமத்தை சேர்ந்த சௌரிராஜ், அம்மளூர் பகுதியை சேர்ந்த சிவசுப்பிரமணியன், திருத்துறைப்பூண்டி சன்னதி தெருவைச் சேர்ந்த குமார், கோட்டூர் பகுதியை சேர்ந்த துரைராஜ் ஆகிய 10 போலி மருத்துவர்களை போலீசார் கைது செய்து விசாரணைக்கு பின்னர் சிறையில் அடைத்தனர்.



பொதுப்பணித்துறை தினக்கூலி ஊழியர்கள் கோரிக்கையை நிறைவேற்றவேண்டும் என புதுச்சேரி சட்டப்பேரவையில் பேசிய சட்ட மன்ற உறுப்பினர் ஏ.எம். எச் நாஜிமை, பொதுப்பணித்துறை தினக்கூலி ஊழியர்கள் சந்தித்து சால்வை அணிவித்து நன்றி தெரிவித்தனர்.



புதுவை ஜிப்மர் அரசு மருத்துவமனையில் இருந்து மாதம் இரு சனிக்கிழமைகளில் சிறப்பு மருத்துவ குழு காரைக்கால் அரசு பொது மருத்துவமனைக்கு வருகை புரிந்து காரைக்கால் வாழ் பொதுமக்களுக்கு சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்கி வரும் நிலையில் நேற்று சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை வயிறு மற்றும் குடல் சம்பந்தமான சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைகள் குறித்த சிறப்பு மருத்துவர்கள் வருகை புரிந்து மருத்துவ சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்கள். இதில் ஏராளமான காரைக்கால் வாழ் பொதுமக்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

# அமேசான் ஆன்லைன் ஷாப்பிங் நிறுவனத்தின் பெயரை பயன்படுத்தி பணம் பறிக்கும் புதிய மோசடி கும்பல்

## சென்னை போலீஸ் கமிஷ்னர் சங்கர் ஜிவால் எச்சரிக்கை

சென்னை, ஏப்.9-

ஆன்லைன் ஷாப்பிங் நிறுவனமான அமேசான் நிறுவனத்தின் பெயரை பயன்படுத்தி புதிய மோசடி கும்பல் பணம் பறித்து வருவதாக சென்னை போலீஸ் கமிஷ்னர் சங்கர் ஜிவால் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது, சைபர் கிரைம் குற்றவாளிகள் நாள்தோறும் தங்களது குற்றத்தின் வகைகளை மாற்றிக் கொண்டு புது யுக்திகளை கையாண்டு மோசடியில் ஈடுபடுகின்றனர்.

தற்போது அமேசான் ஆன்லைன் ஷாப்பிங் நிறுவனத்தின் 9வது ஆண்டு விழா கொண்டாட்டத்தை முன்னிட்டு பரிசுபோட்டி நடத்தியதாகவும், அதில் நீங்கள் வெற்றியாளராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளதாகவும் ஒரு கடிதம் வீட்டுக்கு அனுப்பப்படுகிறது.



அமேசான் இலச்சினையோடு இருக்கும் அந்த கடிதத்தில் ஸ்மார்ட் டிவி, பிரிட்ஜ், வாஷிங் மிஷின், ஸ்மார்ட் போன், மடி கணினி, ரொக்க பணம் ஆகியவை பரிசாக விழுந்திருப்பதாக குறிப்பிட்டு இருக்கும்.

மேலும் அந்த கடிதத்துடன் ஒரு ஸ்கிராட்ச் கூப்பன் இணைக்கப்பட்டு இருக்கும். இந்த கூப்பனை ஸ்கிராட்ச் செய்து அதில் உள்ள குறியீடுகளை அதில் குறிப்பிட்டுள்ள கைப்பேசி எண்ணுக்கு தெரிவிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கும். அதை நம்பி பொதுமக்கள் அந்த கைபேசி எண்ணை தொடர்பு கொள்ளும் போது எதிர்முனையில் பேசும் நபர், பரிசு பொருட்களை அனுப்புவதற்கு ஜிஎஸ்டி உள்ளிட்ட பல்வேறு வரிகள் செலுத்த வேண்டும் என்று கூறுவார்கள். இதை நம்பிய பொதுமக்கள் சம்பந்தப்பட்ட நபருக்கு ஆன்லைன் மூலமாக பணத்தை செலுத்துவார்கள்.

ஆனால் பணத்தை பெறும் நபர், கைப்பேசியை ஸ்விட்ச் ஆப் செய்து விட்டு தொடர்பை துண்டித்து விடுவார். இதன் பின்னரே பணம் செலுத்திய பொது மக்களுக்கு தங்களிடம் பணம் மோசடி செய்யப் பட்டிருப்பது தெரியவரும்.

எனவே இது போன்ற மோசடிகளில் இருந்து பொது மக்கள் தங்களை பாதுகாத்து கொள்ள எச்ச ரிக்கையுடனும், விழிப்புடனும், இருக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# வடசென்னை காங்கிரஸ் கட்சித் தலைவர் போராட்டங்களில் ஈடுபடாத அளவிற்கு வீட்டில் இருந்து போலீஸ் பாதுகாப்பு

சென்னை , ஏப்.9-

பல்வேறு திட்டங்களை தொடங்குவதற்காக தமிழகத்திற்கு வருகை தரும் பிரதமர் மோடிக்கு காங்கிரஸ் கட்சியினர் வள்ளுவர் கோட்டத்தில் கருப்பு உடை அணிந்து எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபடுவதாக அறிவித்துள்ளனர்.

சென்னை புதுவண்ணாரப்பேட்டை பூண்டி தங்கம்மாள் தெருவில் உள்ள வடசென்னை கிழக்கு மாவட்டத் தலைவர் எம்.எஸ்.திரவியம் வீட்டு முன்பு போலீசார் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.



மாவட்டத் தலைவர் திரவியம் கருப்பு சட்டை, கருப்பு பேண்ட் அணிந்து வீட்டிலிருந்து வெளியேறினார். போலீசாரிடம் வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறும் போராட்டத்தில் பங்கேற்பதற்காக செல்வதாக கூறியதால் மாவட்டத் தலைவர் திரவியம் வேறு எங்கும் போராட்டத்தில் ஈடுபடாத அளவிற்கு புதுவண்ணாரப் பேட்டை காவல் ஆய்வாளர் கிருஷ்ணராஜ் தலைமையில் போலீசார் பின் தொடர்ந்து சென்றனர்.

# புதுச்சேரி முதல்வருக்கு பார்கவுன்சில் தலைவர் அமல்ராஜ் நன்றி

புதுச்சேரி, ஏப்,9

வழக்கறிஞர்கள் சேமநல நிதிக்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்த புதுச்சேரி முதல்வருக்கு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார்கவுன்சில் தலைவர் அமல்ராஜ் நன்றி தெரிவித்துள்ளார்.



இது குறித்து புதுச்சேரி முதல்வருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார்கவுன்சில் வழக்கறிஞர்கள் மற்றும் அவர்களின் குடும்ப நலனுக்காக செயல்பட்டு வருகிறது.

இந்த சட்ட ரீதியான அமைப்புக்கு புதுச்சேரி அரசு ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது இதனால் ஏராளமான வழக்கறிஞர்கள் குடும்பங்கள் நற்பலன் பெறும் இந்த நிதியை ஒதுக்கிய முதல்வருக்கு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார்கவுன்சில் சார்பில் நன்றி தெரிவித்து கொள்கிறேன் இவ்வாறு அமல்ராஜ் கூறியுள்ளார்



தென்காசி வடக்கு மாவட்டம் புளியங்குடி பேருந்து நிலையம் காமராஜ் சிலை அருகில் கோடை வெப்பத்தை தணிக்கும் வகையில் புளியங்குடி நகர் மன்றத் தலைவரும், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் விஜயா சௌந்தரபாண்டியன் தலைமையில், பழங்கள், நீர், மோர் பந்தலை தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ வருகை தந்து துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் திமுக நகர செயலாளரும், நகர்மன்ற துணைத் தலைவருமான எ.அந்தோணிசாமி, மேலே நீலிதா நல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் பெரியதுரை, சங்கரன்கோவில் நகர செயலாளர் பிரகாஷ், விஜயா பாண்டியன், சிஎம்ஏ ஜெகதீஷ், மாணவரணி விக்ரம் மணிகண்டன், இளைஞர் அணி பத்திர சாகுல், தலைமை திமுக செயற்குழு உறுப்பினர் ஆசைக்கனி, நகரத் துணைச் செயலாளர் ஷேக் மைதீன், நகர் மன்ற உறுப்பினர்கள் குருராஜ், கணபதி, தங்கம், ஜோதி பாண்டியன், ரெசிகலா, 31வது வார்டு முருகன், முத்துக்குமார், ஆறுமுகம், ராஜவேல் பாண்டியன், பழனி, பேச்சிமுத்து, அருணாச்சலம், கம்பளி மாரியப்பன், உமா மகேஸ்வரி, பொண்ணு துரைச்சி 10வது வார்டு உறுப்பினர்கள் பாஸ்கரன், பந்தல் பாண்டி மற்றும் நகர திமுக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# சென்னை மாநகராட்சி திருவொற்றியூர் 12 வது வார்டில் ஏரியா சபைக் கூட்டம்

சென்னை, ஏப். 9 -

சென்னை, திருவொற்றியூர் 12வது வார்டுக்கு உட்பட்ட ராஜாகடை ராமானுஜர் தெருவில் மாமன்ற உறுப்பினர் வீ.கவிகணேசன் தலைமையில் நடைபெற்ற ஏரியா சபைக்கூட்டத்தில் மாநகராட்சி மருத்துவர், மாநாகராட்சி சுகாதார ஆய்வாளர், உதவி செயற்பொறியாளர், வரி வசூல் செய்யும் அதிகாரி, உள்ளிட்டோர் பங்கேற்றனர்

கூட்டத்தில் பொதுமக்கள் தங்களது பகுதியில் அடிப்படை வசதிகள் குறித்து குடியிருப்பு சங்க நிர்வாகிகள் கோரிக்கை மனுவை மாநாகராட்சி மாமன்ற உறுப்பினரிடம் கொடுத்தனர். அப்போது அப்பகுதியைச் சேர்ந்த 50 வயதுடைய பெண்மணி ஒருவர் தங்களது பகுதியில் தெரு குழாயில் வரும்



தண்ணீரை பக்கத்து தெருவில் இருப்பவர்கள் சிலர் மின் மோட்டார் மூலம் தண்ணீரை டேங்கில் ஏற்றுவதாகவும் இதனால் தங்களுக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுவதால் மாலை நேரத்தில் தண்ணீர் விடும்படி கேட்டார்.

தங்களது பகுதியில் நாய்கள் தொல்லை இருப்பதால் கடந்த மாதத்தில் மட்டும் தெரு நாய்கள் பொதுமக்கள் 7 பேரை கடித்து விட்டதாகவும் புகார் தெரிவித்தனர். தெரு விளக்குகள் இல்லாமல் கிராமத்தில் வாழ்வது போல இருப்பதாகவும் தங்களது பகுதியில் அடிப்படை வசதிகள் செய்து தரும்படி மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் வீ.கவிகணேசன் கேட்டுக்கொண்டார்

தங்களது பகுதியை மாநகராட்சியிடம் ஒப்படைத்தால் சாலை, மின் விளக்குகள், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து தருவதாகவும் உறுதியளித்தார். முன்னதாக குப்பைகளை தரம் பிரித்து கொடுப்பது பற்றி மாநகராட்சி சார்பில் பறை இசை மூலம் விழிப்புணர்வு பிரசாரம் செய்து காண்பித்தனர்.





மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி ஒன்றியம், காவிரிப்பூம்பட்டினம் ஊராட்சி, வடக்குத்தெரு ஜெயக்குமார்- மதியரசி மற்றும் பாலையா -பானுமதி ஆகியோரின் வீடு தீ விபத்தினால் சேதமடைந்தது தகவல் அறிந்த மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளரும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா.எம். முருகன் நேரில் சென்று அவர்களுக்கு ஆறுதல் கூறி நிதி உதவி மற்றும் நிவாரண பொருட்களை வழங்கினார்.

# நகை வாங்க தாயார் பணம் கேட்டதால் தனியார் வங்கி உதவி மேலாளர் தூக்கிட்டு தற்கொலை

சென்னை, ஏப். 9 -

சென்னை, திருவொற்றியூர் கணக்கர் தெருவைச் சேர்ந்தவர் மூர்த்தி. இவரது மகன் பிரவீன்குமார். இவர் தனியார் வங்கியில் உதவி மேலாளராக வேலை பார்த்து வந்தார்.

பிரவீன் குமார் தனது நண்பருக்கு கடனாக பணம் கொடுத்துள்ளார். இந்நிலையில் அவரது தாயார் அமுதா தங்க நகை வாங்குவதற்காக பிரவீன் குமாரிடம் பணம் கேட்டுள்ளார். பிரவீன் குமார் தனது நண்பருக்கு பணம் கொடுத்ததை தாயார் அமுதாவிடம் கூறியுள்ளார். இதனால் பிரவீன் குமாருக்கும் அவரது தாயார்



அமுதாவுக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

இதனால் மனமுடைந்த பிரவீன் குமார் படுக்கை அறையில் மின்விசிறியில் புடவையால் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். இதைப் பார்த்த அவரது தாயார் அமுதா கத்தி கதறி அழுதுள்ளார். வீட்டின் அக்கம் பக்கத்தினர் உதவியுடன் பிரவீன் குமாரைமீட்டு ஆம்புலன்ஸ் மூலம் அரசு ராஜீவ்காந்தி மருத்துவமனைக்கு கொண்டு சென்று அனுமதித்தனர்.

அங்கு பிரவின்குமாரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் வழியிலேயே உயிரிழந்து விட்டதாக கூறியுள்ளனர். இச்சம்பவம் குறித்து திருவொற்றியூர் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் வழக்கு பதிவு செய்து உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

# காதலித்த பெண்ணின் நடத்தை சரியில்லை என்று தாய் கூறியதால் இளைஞர் தூக்கிட்டு தற்கொலை

சென்னை, ஏப். 9 -

சென்னை, திருவொற்றியூர் தியாகராயபுரம் 8வது தெருவைச் சேர்ந்த லாரி ஓட்டுநர் திருமலை. இவரது மனைவி திவ்யா. சென்னை மாநகராட்சியில் தூய்மைப் பணியாளராக வேலை பார்த்து வருகிறார். இவர்களுக்கு 25 வயதுடைய யுகேஷ்குமார் என்ற மகன் இருந்தார். இவர் தனியார் நிறுவனத்தில் கடந்த ஒரு மாதமாக வேலை செய்து வருகிறார்.

பக்கத்து வீட்டில் வசித்துவரும் பவானி என்ற பெண்ணை யுகேஷ்குமார் காதலித்து வந்துள்ளார். தான் பவானியை காதலிப்பதாகவும் பெற்றோரிடம் யுகேஷ்குமார் கூறியுள்ளார்.

இதனையடுத்து கடந்த 2022 ஏப்ரல் மாதம் நிச்சயதார்த்தம் செய்துள்ளனர். பவானி ஏற்கனவே திருமணமாகி விவாகரத்து வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், வழக்கு முடிந்த பிறகு திருமணத்தை நடத்தி



கொள்ளலாம் என்று பேசி வந்த நிலையில் வருகின்ற ஏப்ரல் மாதம் 25 தேதி அன்று திருமணம் தேதி குறித்து வைத்திருந்தனர்.

இந்நிலையில் பவானிக்கும் யுகேஷ்குமாருக்கும் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. பவானி நடத்தை சரியில்லை என்று பலமுறை தாய் திவ்யா மகன் யுகேஷ்குமாரிடம் கூறியுள்ளார். ஆனால் அந்த பெண்ணைதான் திருமணம் செய்து கொள்வேன் என கூறி வந்துள்ளார்.

இதனிடையே திவ்யா வழக்கம் போல் வேலைக்கு சென்று விட்டு வீடு திரும்பிய போது யுகேஷ்குமாரின் இருசக்கர வாகனம் வீட்டின் வாசலில் நின்று கொண்டு இருப்பதை பார்த்துள்ளார். இதனையடுத்து திவ்யா தனது மகள் வித்யாவிடம் தான் வீட்டின் முதல் தளத்தில் இருப்பதாக கூறி சென்றுள்ளார். பின்னர் வித்யா தனது அண்ணனை கூப்பிட சென்ற போது வீட்டின் மின் விசிறியில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டு இருப்பதை பார்த்து அதிர்ச்சி அடைந்துள்ளார்.

உடனடியாக அக்கம் பக்கத்தினருக்கு தகவல் கொடுத்து யுகேஷ்குமாரை கீழே இறக்கி வைத்து 108 ஆம்புலன்ஸுக்கு தகவல் தெரிவித்தனர். அவர்கள் யுகேஷ்குமார் உடலை பார்த்து அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக கூறி சென்றனர்.

இதனையடுத்து திருவொற்றியூர் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு யுகேஷ்குமார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இச்சம்பவம் குறித்து திருவொற்றியூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்



மதுரை மாட்டுத்தாவணி பின்புறம் பைபாஸ் ரோட்டில் உள்ள பாண்டி கோவில் சாலை ஆர்.ஆர் கல்யாண மண்டபத்தில் தமிழ்நாடு நெடுஞ்சாலை துறை அனைத்து ஓட்டுநர்கள் தலைமைச் சங்கம் மாநில பொதுக்கூட்டம் சுந்தரபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. இதில் அகவிலைப்படி உயர்வு, புதிய சலுகை போன்ற சித்தரிப்பது, காலம் தாழ்த்தி வழங்குவதும், நிறுவைத் தொகையினை மறுப்பதும், குறைவான ஊதியத்தில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கு கடுமையான மன வேதனை ஏற்படுத்தியுள்ளது, பணியாளர்களுக்கு மீண்டும் பழைய ஓய்வு ஊதிய திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குரிய ஆணையை வெளியிட வேண்டும் போன்ற மேலும் பல கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டது. முன்னிலையாக திண்டுக்கல் ராஜன் மாநில துணைச் செயலாளராகவும், மதுரை சுப்புராஜ் மாநில துணை தலைவராகவும் நியமிக்கப்பட்டனர். மேலும் நிகழ்வில் பொங்கியண்ணன் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் செயலாளர் குமார், பொருளாளர் முருகேசன், செயல் தலைவர் கண்ணன், மாநிலத் தணிக்கையாளர் செல்வராஜ் மேலும் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# அனாதை பிணத்தை அவரவர் மத வழக்கப்படி நல்லடக்கம் செய்து வருபவருக்கு பொதுமக்கள் பாராட்டு

தரங்கம்பாடி, ஏப். 9 -

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடியில் காசிம் ரைஸ்மில் உரிமையாளர் பாவாசா அகமது என்பவர் பொறையாறில் இயங்கி வரும் மனிதநேய அரவணைப்பு இல்லத்தில் பல ஆண்டுகளாக ஆதரவற்றவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்து வருகிறார்.

மேலும் அங்கு யார் இறந்தாலும் இறந்தவரின் மத முறைப்படி நல்லடக்க சேவை செய்து வருகிறார். அந்த வகையில் கடந்த ஆண்டு இஸ்லாம் மதத்தை சார்ந்த ஆதரவற்ற சிக்கந்தர்பீவி (80) என்பவர் 8 ஆம் தேதி மதியம் உயிரிழந்தார். அவருக்கு அவரது மதப்படி மனிதநேய அரவணைப்பு இல்லத்தில்



இருந்து தரங்கம்பாடி பள்ளிவாசலுக்கு எடுத்துச் சென்று ஊர் ஜமாத்தார் மற்றும் இஸ்லாமிய நண்பர்கள் உதவியுடன் பாவாசா அஹமது சிக்கந்தர்பீவியை நல்லடக்கம் செய்தார். சென்ற ஆண்டு சம்சுதீன் என்ற இஸ்லாமியர் ஒருவர் இறந்தார். அவரை அவரது மத முறைப்படி நல்லடக்கம் செய்தார்.

அதேபோல் கடந்த மாதம் ரேவதி என்ற பெண் உயிரிழந்தார். இவருக்கு உறவினர்கள் யாரும் இல்லாததால் அவரை இந்து முறைப்படி பாவாசா அகமது குடும்பத்தார்கள் மற்றும் நண்பர்களுடன் அடக்கம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பாவாசா அகமதுக்கு அவரது குடும்பத்தார்கள் உறுதுணையாக இருந்து இச்சேவை செய்து வருவதை பொதுமக்கள் பாராட்டி வருகின்றனர்.



சென்னை தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் தலைமையில், ஜாக்டோ- ஜியோ அமைப்பினர்களுடன் அவர்களது கோரிக்கைகள் தொடர்பாக ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ஜாக்டோ- ஜியோ அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



சென்னை, ஒக்கியம் துரைப்பாக்கம், கண்ணகி நகர், 8வது பிரதான சாலை, மாநகராட்சி அலுவலகம் அருகில் உள்ள, முதல் தலைமுறை கற்றல் பயிற்சி மையத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நடைபெறும் சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் காப்பீட்டுத் திட்ட பயனாளிகள் பதிவு செய்யும் முகாமினை தொடங்கி வைத்து பார்வையிட்டார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வுக் குழும இயக்குநர் ஷில்பா பிரபாகர் சதீஷ், தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர் எஸ்.உமா மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

# செந்தூரான் பொறியியல் கல்லூரியில் 11வது பட்டமளிப்பு விழா

புதுக்கோட்டை, ஏப்.9-

செந்தூரான் பொறியியல் கல்லூரியின் 11வது பட்டமளிப்பு விழாவில் காரைக்குடி அழகப்பா பல்கலைகழகத்தின் துணை வேந்தர் கலந்துகொண்டு பட்டம் வழங்கி சிறப்பித்தார்.




புதுக்கோட்டை மாவட்டம் லேணா விலக்கில் அமைந்துள்ள செந்தூரான் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் பதினொன்றாவது பட்டமளிப்பு விழா நேற்று நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரியின் தலைவர் ஏ.வி.எம். செல்வராஜ் தலைமை வகித்தார். விழாவில் முதன்மைச் செயல் அதிகாரி ஏ.வி.எம்.எஸ். கார்த்திக் பட்டமளிப்பு விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றார். கல்லூரி முதல்வர் கே.கணேஷ் பாபு பட்டமளிப்பு விழா அறிக்கையை சமர்ப்பித்தார்.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் ஜி.ரவி 30 முதுநிலை பட்டதாரி மாணவர்களுக்கும், 220க்கும் மேற்பட்ட இளநிலை பட்டதாரி மாணவ, மாணவிகளுக்கு பட்டம் வழங்கி பேசியதாவது, மாணவர்கள் தாங்கள் கற்ற கல்வியின் மூலம் ஒரு இலக்கினை நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும், தொழில்நுட்பக்கல்வி பயின்றதின் மூலம் தன்னையும் வளர்த்துக் கொண்டு சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும், தன்னிடம் உள்ள திறமைகளை வெளிக்கொணரவேண்டும், மேற்படிப்புகளான ஆராய்ச்சி படிப்புகள், அரசு துறை சார்ந்த தேர்வுகள் எழுதுவது என முன்னோக்கிய செயல்களை செய்ய வேண்டும், மேலும் மாணவர்கள் உடற்தகுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும், மனதை ஒருநிலைபடுத்தக் கூடிய யோகா போன்ற பயிற்சிகளில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

திருச்செந்தூர் முருகன் அறக்கட்டளையின் அறங்காவலர்களான மேலாண்மை இயக்குநர் ஆர் வயிரவன், துணைத் தலைவர் சோம. நடராஜன், தாளாளர் ஏ.வி.எம்.ராமையா, செயலர் டி.தியாகராஜன், நிர்வாக இயக்குநர் எம். பாண்டிகிருஷ்ணன், செயல் இயக்குநர் டி.கணேசன், துணைச் செயலர் ஆர்.அம்பிகாபதி, மனிதவள இயக்குநர் ஆர்.மீனாவயிரவன், மனிதவள திட்டமிடல் எஸ்.யோகநாதன், எம்.செந்தில் கலந்து கொண்டனர். மேலும் விழாவில் பெற்றோர்கள், மாணவ, மாணவிகள், பேராசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கிறிஸ்தவப் பெருமக்கள் அனைவருக்கும் ஈஸ்டர் திருநாள் நல்வாழ்த்துகள் – ஓ.பன்னீர்செல்வம்

சென்னை, ஏப்.9-

இன்று ஞாயிற்றுக்கிழமை இயேசு உயிர்த்தெழுந்த தினத்தையொட்டி கிறிஸ்தவப் பெருமக்கள் அனைவருக்கும் ஈஸ்டர் திருநாள் நல்வாழ்த்துகள் என ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, ”தேவ குமாரனாம் இயேசுபிரான் உயிர்த்தெழுந்ததினத்தை ஈஸ்டர் திருநாளாகக் கொண்டாடி மகிழும் கிறிஸ்தவப் பெருமக்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த ஈஸ்டர் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைதியும், மகிழ்ச்சியும் நிலவிட வேண்டும், பகைவரிடத்தும் அன்பு காட்ட வேண்டும் என்று போதித்த இயேசுபிரான், சிலுவையில் அறையப்பட்டு பின்பு உயிர்த்தெழுந்த மூன்றாம் நாள் ஈஸ்டர் திருநாளாகக் கொண்டாடப்படுகிறது. இந்நாளில் கிறிஸ்தவர்கள் தங்களது புனித நூலான பைபிளின் வாசகங்களை வாக்கிலும், மனதிலும் நிலைநிறுத்தியவர்களாய் தேவாலயங்களுக்குச் சென்று சிறப்பு பிரார்த்தனைகள் செய்து கர்த்தராகிய இயேசு பிரானை வழிபடுவார்கள்.

இந்த நன்னாளில், மனிதநேயம் கொண்டவர்களாய் அன்புடனும், சகோதரத்துவ உணர்வுடனும் பிறருக்கு துன்பங்கள் இழைத்திடாமல் வாழ்ந்து, எப்போதும் பிறரது துயரங்களைக் களைந்திட முயற்சி செய்திட வேண்டும் என்ற இயேசுபிரானின் உயரிய போதனைகளை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்ற எனது விருப்பத்தினைத் தெரிவித்து, கிறிஸ்தவப் பெருமக்கள் அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை எனது ஈஸ்டர் திருநாள் நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

## காவேரி டெல்டா பகுதியில்

# புதிதாக சுரங்கம் தோண்டும் பணியை கைவிட்ட மத்திய அரசுக்கு நன்றி – எடப்பாடி கே.பழனிசாமி

சென்னை, ஏப்.9-

காவேரி டெல்டா பகுதியில் புதிதாக சுரங்கம் தோண்டும் பணியை கைவிட்ட மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்து தமிழக எதிர்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி அறிக்கை வெளியிட்டுள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், காவேரி டெல்டா விவசாயிகளின் நலனுக்காக பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்டது. இந்நிலையில், அண்மையில் அங்கு நிலக்கரி சுரங்கம் அமைக்க மத்திய அரசு அறிவிப்பாணை வெளியிட்டது.

தூங்கிக்கொண்டிருந்த, காலங்கடந்து எதிர்ப்பு தெரிவித்த விடியா திமுக அரசின் கவனத்தை, தமிழ் நாடு சட்டமன்றப்பேரவையில் சிறப்பு கவன ஈர்ப்பு கொண்டு வந்ததுடன், நாடாளுமன்றத்திலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கவன ஈர்ப்பு கொண்டுவந்து எதிர்ப்பு தெரிவித்த நிலையில், நேற்று மத்திய சுரங்கத் துறை அமைச்சர், தமிழ் நாட்டில் புதிதாக சுரங்கம் தோண்டும் பணியை கைவிடுவதாக அறிவித்தது, தமிழக மக்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும். இதற்காக, பாரதப் பிரதமருக்கு எனது நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என குறிப்பிட்டுள்ளார்.



பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் பசுமைக்குழு கூட்டம் மாவட்ட கலெக்டர் கற்பகம் தலைமையில் நடைபெற்றது. அருகில் மாவட்ட வன அலுவலர் குகனேஷ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## விவசாயிகள் வேளாண் அடுக்குத்திட்டத்தில்

# பதிவு செய்து பயன்பெற புதுக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குனர் அறிவிப்பு

ஆதனக்கோட்டை, ஏப்.9-

புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டை வட்டார விவசாயிகள் அனைவரும் வேளாண் அடுக்குத் திட்டத்தில் பயன்பெற ஆன்லைன் மூலம் விவரங்களை பதிவு செய்து பயன் பெற்றுக்கொள்ளலாம் என புதுக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குனர் ச.கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது, புதுக்கோட்டை வட்டார விவசாயிகள் வேளாண் அடுக்குதிட்டத்தில்தமிழக அரசின் பல்வேறு துறை சார்ந்த திட்டங்களில் விவசாயிகள் இணைந்து பயன்பெறும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்த திட்டத்தில் விவசாயிகள் இணைந்து தங்கள் வட்டார கிராம நிர்வாக அலுவலர் வட்டார வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறை அலுவலகத்தை அணுகி விவசாயிகளின் ஆதார் எண், விவசாயிகளின் புகைப்படம், அவர்களின் வங்கி கணக்கு எண் ஆகிய விவரங்கள் மற்றும் நில உரிமை ஆவணங்களுடன் சென்று GRAINS என்ற இணைய தளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். இவ்வாறு பதிவேற்றம் செய்யும்போது நில விவரங்களுடன் இணைக்கப்பட்ட விவசாயியின் விவரம் அடிப்படையில் GRAINS இணையதளத்தில் சேகரிக்கப்பட்டு வேளாண்மை உழவர் நலத்துறை பேரிடர் மேலாண்மை துறை, தோட்டக்கலைத்துறை, கூட்டுறவுத்துறை, பட்டு வளர்ப்புத்துறை, உணவு வழங்கல் துறை, வேளாண்மை பொறியியல்துறை, ஊரக வளர்ச்சித்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம் விதை சான்றளிப்பு துறை, வருவாய்த்துறை, சர்க்கரை துறை ஆகிய துறைகளின் திட்டங்களில் பயனடைய பயன்படுத்தப்படுகிறது.

மேலும் நிதி திட்ட பலன்கள் ஆதார் எண் அடிப்படையில் நேரடி பண பரிமாற்றம் மூலம் விவசாயிகளின் வங்கி கணக்குக்கு நேரடியாக அனுப்பப்படும்.

இதற்கான முகாம்கள் அனைத்தும் கிராமங்களிலும் வருகின்ற ஏப்ரல்13ம் தேதி நடைபெற உள்ளது. புதுக்கோட்டை வட்டார வேளாண் விவசாயிகள் இந்த முகாம்களை பயன்படுத்திக்கொண்டு வேளாண் அடுக்கு திட்டத்தில் பதிவு செய்து பயன்பெறுமாறு வேளாண்மை உதவி இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

# தீராத வயிற்று வலியால் அவதிப்பட்ட வாலிபர் பூச்சி மருந்து குடித்து பலி

ஊத்துக்கோட்டை, ஏப். 9 –

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், நெல்வாய் கிராமத்தில் வசித்து வந்தவர் விஜய் (வயது 18). தீராத வயிற்று வலியால் அவதிப்பட்டு வந்தார். தொடர்ந்து சிகிச்சை பெற்றும் பயன் இல்லை.

நேற்று முன்தினம் காலை நெய்வேலி ஏரிக்கு சென்றபோது வயிற்று வலி ஏற்பட்டது. இதனால் மனம் உடைந்த அவர் பூச்சி மருந்து குடித்து மயங்கி விழுந்தார். அவ்வழியே சென்றவர்கள் அவரை மீட்டு சென்னை ராஜீவ் காந்தி அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று அனுமதித்தனர். அங்கு அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்தும் பயனின்றி நேற்று பரிதாபமாக பலியானார்.

இந்த சம்பவம் குறித்து அவரது தாயார் வளர்மதி ஆரணி காவல் நிலையத்தில் நேற்று புகார் செய்தார். எனவே போலீசார் வழக்கு பதிவு செய்து இந்த சம்பவம் குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர்.

# போஸ்டர் ஒட்டும் இடமாக மாறும் வழிகாட்டுத் தகவல் பலகைகள் – நடவடிக்கை எடுக்க கோரிக்கை





ஆலங்குடி, ஏப்.9-

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி மற்றும் கறம்பக்குடி பகுதிகளில் வழிகாட்டு தகவல் பலகைகளில் தொடர்ந்துபோஸ்டர்கள் ஒட்டப்படுவதால் வாகன ஓட்டிகள் அவதிப்படுகின்றனர். ஆகையால் போஸ்டர் ஒட்டுபவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாநில நெடுஞ்சாலைத்துறை சாரபில் சாலை ஓரங்களில் ஒவ்வொரு ஊரின் முன்பாக ஊரின் பெயர்கள், பிரிவு சாலைகளில் குறியீட்டு தகவல்கள், அடுத்த பெரிய நகரங்கள் எத்தனை கிலோமீட்டரில் உள்ளன உள்ளிட்ட விவரங்களுடன் தகவல் பலகை அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் வேகத்தடை, வளைவுகள் உள்ளிட்ட குறியீடுகளுடன் எச்சரிக்கை பலகைகளும் வைக்கப்பட்டுள்ளது. மேலும் ஊராட்சி நிர்வாகத்தின் சார்பிலும் ஊரின் எல்லைப் பகுதிகளில் ஊரின் பெயரை குறிப்பிட்டு பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பலகையின் மூலம் புதிதாக அந்தப் பகுதிக்கு வருபவர்களும், வாகனங்களில் அந்த வழியே நெடுந்தூரம் பயணிப்பவர்களும் தாங்கள் இருக்கும் இடத்தை எளிதில் அறிந்து கொள்ள முடியும். இந்த தகவல் பலகைகள் நல்ல ஒரு வழிகாட்டியாக இருந்து வருகிறது. ஆனால் ஆலங்குடி, கறம்பக்குடி பகுதிகளில் உள்ள வழிகாட்டு தகவல் பலகைகளில் அந்தப் பகுதியில் நடக்கும் திருமணங்கள், பிறந்தநாள் வாழ்த்து, கண்ணீர் அஞ்சலி, நினைவு அஞ்சலி, அரசியல் கட்சி போஸ்டர்கள் இதில் ஒட்டப்பட்டு வருகிறது. இதனால்வாகன ஓட்டிகள் புதிதாக அந்த வழியை கடப்பவர்கள் சிரமத்துக்கு உள்ளாகின்றனா். வேகத்தடை குறியீடு பலகை மேலே ஒட்டப்படுவதால் வழியே செல்லும் இருசக்கர வாகனங்களில் செல்பவர்கள் நிலைதடுமாறி கீழே விழும் விபத்து ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத்துறை பணியாளர்கள் சில இடங்களில் போஸ்டர்களை அப்புறப்படுத்தினாலும் அடுத்தசிலநாட்களிலேயே மீண்டும் அதே இடத்தில் மீண்டும் போஸ்டர்கள் ஒட்டப்படுகிறது.

எனவே போஸ்டர் ஒட்டுபவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவும், வழிகாட்டு தகவல் பலகையில் மீண்டும் போஸ்டர் ஒட்டாமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாகன ஓட்டிகளும் அப்பகுதி பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வேலை வாங்கித் தருவதாக கூறி உயர் அதிகாரிகளின் கையெழுத்தை போலியாக போட்டு ரூ.80 லட்சம் மோசடி

## நடவடிக்கை எடுக்க சிபிஎம் வலியுறுத்தல்

புதுக்கோட்டை, ஏப்.9-

அரசு வேலை வாங்கித் தருவதாகக் கூறி தலைமை செயலாளர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளின் கையெழுத்தை அரசு முத்திரையுடன் போலியாகப் போட்டு ரூ.80 லட்சம் அளவுக்கு மோசடி செய்தவரை கைது செய்து காவல் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தி உள்ளது.

இதுகுறித்து கட்சியின் மாவட்டச் செயலாளர் எஸ்.கவிவர்மன் தெரிவித்து இருப்பது, காஞ்சிபுரம் அனகாபுதூர், திம்மசமுத்திரம் திவ்யா நகரைச் சேர்ந்த ஆரோன் மகன் பிரான்சிஸ் ஜெரால்டு என்கிற சசிகுமார் (35). இவர் தமிழ்நாடு முழுவதும் போலி பணி ஆணைகளை வழங்கி பண வசூல் வேட்டை நடத்தியுள்ளதாக பல்வேறு குற்றச்சாட்டுகள் உள்ளன.

இந்நிலையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள புதுக்கோட்டை, கந்தர்வகோட்டை, திருவரங்குளம், கறம்பக்குடி ஆகிய வட்டாரப் பகுதிகளில் படித்து வேலைக்காக காத்திருக்கும் வறுமையில் வாடும் குடும்ப இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களிம் இத்தகைய மோசடியில் ஈடுபட்டு இருப்பது தெரிய வந்துள்ளது.

"எனக்கு தலைமைச் செயலாளரை தெரியும். என்னை நம்பி பணம் கொடுத்தால் வேலை ஆர்டர் வாங்கித் தருவதாகக் கூறி சில காகிதங்களைக் காட்டி அவர்களை நம்ப வைத்துள்ளார். பிறகு அவர்களிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு தலைமைச் செயலாளர் இறையன்பு ஐஏஎஸ், அமுதா ஐஏஎஸ், உமா மகேஸ்வரி ஐஏஎஸ், மகிழ்மதி ஐஏஎஸ், ஜெயந்தி ஐஏஎஸ், அகிலாண்டேஸ்வரி ஐஏஎஸ் எனப் பலரது கையெழுத்துகளுடன் தமிழ்நாடு அரசு முத்திரையைப் பயன்படுத்திபோலி பணி ஆணைகளை வழங்கி, சுமார் 80 லட்ச ரூபாய் அளவுக்குஅவர்வசூலித்து இருப்பதுதெரியவருகிறது. இது மோசடியான, போலியான பணி ஆணை எனத் தெரியவந்ததும் கொடுத்த பணத்தை கேட்டு பாதிக்கப்பட்டவர்கள் ஜெரால்டு என்ற சசிக்குமாரிடம் கேட்டுள்ளனர். ஆனால், அதற்கு திமிராகவும் அலட்சியமாகவும் ஜெரால்டு பதிலளித்துள்ளார். இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மக்கள் எங்கள் கட்சி அலுவலகம் வந்து தங்களைக் காப்பாற்றுமாறு முறையிட்டனர்.

இதனைத்தொடர்ந்து தமிழ்நாடு அரசு முத்திரை மற்றும் தலைமைச் செயலாளர், ஐஏஎஸ் அதிகாரிகளின் கையெழுத்துகள் போலியாகப்பயன்படுத்தி கிராமங்களில் படித்த இளைஞர்கள், இளம் பெண்களிடம் பணம் வசூல் செய்து மோசடி செய்த நபர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி புதுக்கோட்டை மாவட்ட கலெக்டர் கவிதா ராமு, மாவட்ட காவல்கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே ஆகியோரிடம் பாதிக்கப்பட்ட மக்களுடன் புகார் தெரிவித்தோம்.

இந்நிலையில், மேற்படி மோசடிப் பேர்வழி ஜெரால்டு ஆலங்குடி அருகே பாச்சிக்கோட்டை கிராமத்தில் இருந்து கொண்டு பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு வெள்ளிக்கிழமை அலைபேசியில் அழைத்துள்ளார். இதனையடுத்து பாதிக்கப்பட்ட நபர்கள் ஜெகன், கமல் உள்ளிட்ட 4 பேர் அங்கு சென்றுள்ளனர். அப்போது அங்கு இருந்த ஜெரால்டு தன்னைக் கொல்ல வருவதாக நாடகமாடி ஆலங்குடி போலீசாருக்கு மற்றவர்களை வைத்து தகவல் தெரிவித்துள்ளார். இதனையடுத்து ஆலங்குடி போலீசார் பாதிக்கப்பட்ட நபர்களையே கைது செய்து இரவு முழுவதும் தங்க வைத்துள்ளனர்.

காவல்துறையின் இத்தகைய நடவடிக்கை வன்மையாக கண்டிக்கத்தக்கது. உயர் அதிகாரிகளின் கையெழுத்து மற்றும் அரசு முத்திரைகளை மோசடியாக பயன்படுத்தி வேலை வாங்கித் தருவதாக மிகப்பெரிய முறைகேட்டில் ஈடுபட்டுள்ள நபரை உடனடியாக கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட நபர்கள் இழந்துள்ள பணத்தை மீட்டுத்தர வேண்டும். தமிழ்நாடு முழுவதும் இது போன்ற மோசடிப் பேர்வழிகளின் நடமாட்டத்தை கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி சென்னை பெருநகர பகுதியில் 26 சட்டமன்றத் தொகுதிகளை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும நிதியில் மேம்படுத்தப்படும் பணிகள் குறித்தும், சட்டமன்ற கூட்டத்தொடர் அறிவிப்புகள் 2023-2024ம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகள் குறித்தும் நேற்று சென்னை பெருநகர வளர்ச்சி குழும அலுவலகக் கூட்டரங்கில் சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் அபூர்வா, பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மைச் செயலாளர்/ஆணையாளர் ககன்தீப் சிங் பேடி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணைய சிறப்பு அலுவலர் ஐ.ஜெயக்குமார், சென்னை மாநகர போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் அன்பு ஆபிரகாம் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஆதனக்கோட்டையில் ஆளும் பாஜக அரசை கண்டித்து காங்கிரஸ் கட்சியினர் கண்டன ஆர்ப்பாட்டம்

ஆதனக்கோட்டை, ஏப்.9-



புதுக்கோட்டை மாவட்டம் ஆதனக்கோட்டையில் ஆளும் ஒன்றிய பாஜக மோடி அரசை கண்டித்து காங்கிரஸ் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாநில பொதுக்குழு உறுப்பினரும் வழக்கறிஞருமான சந்திரசேகர் தலைமை தாங்கினார், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினரும்

முன்னாள் நகர் மன்றத்தலைவருமான துரை.திவ்யநாதன் முன்னிலை வகித்தார்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் குஜராத் மாநிலம் சூரத் நீதிமன்றத்தில் நடைபெற்ற அவதூறு வழக்கு ஒன்றில் ராகுல் காந்திக்கு வழங்கப்பட்ட தீர்ப்பை காரணம் காட்டி பாசிச பாஜக அரசே மோசடி மோடி அரசே எங்கள் தலைவர் ராகுல்காந்தியின் மக்களவை உறுப்பினர் பதவியை பறித்து ஜனநாயக படுகொலை செய்த மோடி அரசே எனவும் அதானிக்கும் அம்பானிக்கும் மோடிக்கும் என்ன தொடர்பு எல்ஐசி பாரத ஸ்டேட் வங்கி ஏன் அம்பானிக்கும் அதானிக்கும் தாரைவார்கிற, ஆண்டுக்கு இளைஞர்களுக்கு இரண்டு கோடி வேலை வாய்ப்பு என்ன ஆச்சு, விவசாயிகள் இரட்டிப்பு வருமானம் என்ன ஆச்சு, 15 லட்ச ரூபாய் வங்கிக்கணக்கில் போடுவது எண்ணாச்சு கேஸ் சிலிண்டரின் விலை உயர்வை திரும்பப் பெறு, பெட்ரோல் டீசல் விலை உயர்வை கட்டுப்படுத்து உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறித்தி கண்டன முழக்கம் எழுப்பி காங்கிரஸ் கட்சியினர் கோசம் போட்டனர்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில சிறுபான்மை துறை துணை தலைவர் இப்ராகிம் பாபு, புதுக்கோட்டை நகர காங்கிரஸ் தலைவர் பருக்ஜெய்லானி, ஒன்றியத் தலைவர் பழனியப்பன் மாநில பொதுக்குழு உறுப்பினர் கே.எம். ராஜகோபால் கட்சி நிர்வாகிகளான தனபதி, ஜெய்சங்கர் ரெங்கராஜ் ஆதனக்கோட்டை பார்வதி தமிழ்வாணன் முன்னாள் வட்டாரத் தலைவர் ராமமூர்த்தி உள்ளிட்ட காங்கிரஸார் கலந்து கொண்டனர்.

# விடுதலை : இரண்டாவது பாகத்திற்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறேன்

## ரஜினிகாந்த் ட்விட்

சென்னை, ஏப்.9-

விடுதலை படத்தின் முதல் பாகத்தை பார்த்த நடிகர் ரஜினிகாந்த் இரண்டாவது பாகத்திற்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறேன் என ட்விட்டரில் தெரிவித்துள்ளார்.



தமிழ் திரையுலக வெற்றி இயக்குனரான வெற்றிமாறன் இயக்கத்தில் கடந்த மார்ச் 31ம் தேதி விடுதலை படத்தின் முதல்பாகம் வெளியானது. இத்திரைப்படத்தில் விஜய் சேதுபதி, சூரி, பவானி ஸ்ரீ, சேத்தன், ராஜீவ் மேனன், கௌதம் வாசுதேவ் மேனன் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இத்திரைப்படத்திற்கு இசைஞானி இளையராஜா இசையமைத்துள்ளார்.

மேலும் இந்த படம் வெளியாகி ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ள நிலையில் ரசிகர்கள் இப்படத்தின் 2ம் பாகத்திற்காக காத்து கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் விடுதலை பாகம் 1 படத்தை பார்த்த நடிகர் ரஜினிகாந்த், விடுதலை படக்குழுவினரை அழைத்து பாராட்டியுள்ளார்.

மேலும் இத்திரைப்படம் குறித்து அவரது ட்விட்டர் பக்கத்தில் அவர் கூறியிருப்பதாவது, "விடுதலை, இதுவரை தமிழ்த் திரையுலகம் பார்த்திராத கதைக்களம். இது ஒரு திரைக்காவியம். சூரியின் நடிப்பு பிரமிப்பு. இளையராஜா இசையில் என்றும் ராஜா. வெற்றிமாறன் தமிழ்த் திரையுலகின் பெருமை. தயாரிப்பாளருக்கு என்னுடைய வாழ்த்துகள். இரண்டாவது பாகத்திற்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறேன்" என கூறியுள்ளார்.

இதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக நடிகர் சூரி தனது ட்விட்டர் பக்கத்தில், "இதுவரை கிடச்ச வாழ்த்துகளுக்கு சிகரமாக வந்தது தலைவர் சூப்பர் ஸ்டாரின் வாழ்த்து. யார பார்த்து பிரமிச்சு சினிமாவுக்கு வரணும்னு நினச்சேனோ அவர் எங்கள் படைப்பையும் உழைப்பையும் பாராட்டி பேசிய தருணம் வாழ்க்கை முழுமை அடைஞ்சதா உணர்றேன். இறைவனுக்கு நன்றி. என்ன சொல்றதுன்னே தெரியலை தலைவரே... நெஞ்சார்ந்த நன்றிகள்.. என் கால்கள் தரையில் இல்லை.. கனவிலும் நினைக்காத தருணங்களை தற்போது வாழ்ந்து வருகிறேன்" என நெகிழ்ச்சியாக தெரிவித்துள்ளார்.

# சென்னை நிகழ்வில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு... முதல் பக்க தொடர்ச்சி

அகல ரயில்பாதைத் திட்டத்தையும் பிரதமர் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், "தமிழ்நாட்டின் தலைமகனான பேரறிஞர் அண்ணா பெயரிலான பன்னாட்டு விமான நிலையத்தில், 1,260 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய ஒருங்கிணைந்த முனையக் கட்டடம், சென்னை - கோவை இடையிலான வந்தே பாரத் அதிவிரைவு ரயில் சேவை, திருத்துறைப் பூண்டி - அகஸ்தியம்பள்ளி ரயில் சேவை எனத் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான சில முக்கிய திட்டங்களைத் தொடங்கி வைக்க வருகை தந்திருக்கிறார் நமது பிரதமர் நரேந்திர மோடி.

பல்வேறு இனங்களைச் சார்ந்த பல மொழிகளைப் பேசும் மக்கள் பரந்து வாழும் பன்முகத்தன்மைக் கொண்ட மாநிலங்களைக் கொண்ட இந்தியத் துணைக் கண்டத்தின் ஒன்றிய அரசானது, மாநிலங்களின் வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்களை தொடர்ந்து - தொய்வில்லாமல் நிறைவேற்றித் தரும் போதுதான் ஒட்டுமொத்த இந்தியாவும் வளம் பெறும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தால் வகுக்கப்பட்ட கூட்டாட்சிக் கருத்தியலும் செழிக்கும்.

அந்த அடிப்படையில், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு திராவிட மாடல் அரசும் முனைப்போடு முயன்று வருகிறது. நெருக்கடியான நிதிநிலைச் சூழல் இருக்கும் போதிலும், நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற போது சாலைகள், பாலங்கள் போன்ற கட்டமைப்புகளுக்கு மூலதனச் செலவாக இருந்த 33,068 கோடி ரூபாயை இந்த ஆண்டு 44,365 கோடி ரூபாயாக உயர்த்தியுள்ளோம்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாட்டின் நெடுஞ்சாலை ஆணையத்தால் செயல்படுத்தப் பட்டுள்ள 2,423 கோடி ரூபாய் மதிப்பிலான இரண்டு சாலைத் திட்டங்களை தொடங்கி வைத்து, 1,277 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான இரண்டு திட்டங்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்ட இருக்கிறார்கள். நமது மாநிலப் பொருளாதாரத்தின் ரத்த நாளங்களாக விளங்கும், சாலை கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான ஒன்றிய அரசின் முயற்சிகளுக்கு, தமிழ்நாடு அரசு தன்னுடைய முழு ஒத்துழைப்பை தொடர்ந்து வழங்கும்.

இந்தியாவில் உள்ள மாநிலங்களிலேயே, சிறந்த சாலைக் கட்டமைப்பை பெற்று, சாலைகள் அடர்த்திக் குறியீட்டில் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு வளர்ந்துள்ளது. சாலைக் கட்டமைப்பை மேலும் மேம்படுத்துவதற்கு பெரும் மூலதனச் செலவினங்களைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம்.

இருப்பினும், தமிழ்நாட்டின் பல பகுதிகளில், அடுத்த கட்ட வளர்ச்சிக்குத் இன்றியமையாத சாலைக் கட்டமைப்புத் தேவைகள் தொடர்ந்து உயர்ந்தவாறு உள்ளன.

இத்தகைய தேவைகளை நிறைவு செய்வதற்கான முக்கிய திட்டங்களான, சென்னை - மதுரவாயல் உயர்மட்டச் சாலை,

சென்னை - தாம்பரம் உயர்மட்டச் சாலை, கிழக்கு கடற்கரை சாலையை நான்கு வழிச்சாலை ஆக்குதல், சென்னை காஞ்சிபுரம் வேலூர் நெடுஞ்சாலையையும், சென்னை -மதுரை தேசிய நெடுஞ்சாலையையும் ஆறு வழித்தடமாக மேம்படுத்துதல் போன்ற பல்வேறு முக்கிய திட்டங்கள் விரைவுபடுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மக்களுக்கு நெருக்கமானவை மாநிலங்களாக இருப்பதால் மக்கள் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய கடமை மாநிலங்களுக்கே அதிகம் இருக்கிறது. எனவே, மாநிலங்களின் நிதித் தேவைகளையும் மாநில மக்களின் எண்ணங்களை நிறைவேற்றும் திட்டங்களை நிறைவேற்றவும் ஒன்றிய அரசினுடைய ஒத்துழைப்பு மிகமிகத் தேவை என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். இந்தியப் பிரதமரும் ஒரு மாநிலத்தினுடைய முதல்வராக இருந்தவர் என்பதால் எனது கோரிக்கையின் உள்ளீட்டை அவரும் உணர்வார் என்று நான் கருதுகிறேன்" என்று முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

### எடப்பாடி பழனிசாமி மீதான ஊழல் குற்றச்சாட்டு

# லஞ்ச ஒழிப்பு போலீசார் விசாரணை நடத்த தமிழக அரசு அனுமதி

சென்னை, ஏப்.9-

மருத்துவ கல்லூரிகள் கட்டியதில் முன்னாள் முதல்வர் எடப்பாடி கே பழனிசாமி ஊழல் செய்திருப்பதாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பாக உரிய விசாரணை நடத்த லஞ்ச ஒழிப்பு போலீசாருக்கு தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.



அதிமுக பொதுச்செயலாளராக இருக்கும் எடப்பாடி கே பழனிசாமி, 2017ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரை முதலமைச்சராக இருந்தார். அப்போது எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் கிருஷ்ணகிரி, திருவள்ளூர், அரியலூர், கள்ளக்குறிச்சி, நாமக்கல், ராமநாதபுரம், விருதுநகர், திண்டுக்கல், நாகப்பட்டினம், திருப்பூர், நீலகிரி ஆகிய 11 இடங்களில் மருத்துவ கல்லூரிகளுக்கு புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டன. தமிழக அரசின் பொதுப்பணித்துறை சார்பில் இந்த பணிகள் மேற்கொள்ளப் பட்டன. அப்போது முதலமைச்சராக இருந்த எடப்பாடி பழனிசாமியிடமே பொதுப்பணித்துறையும் இருந்தது. அவரது ஒப்புதலின் பேரில் நடைபெற்ற கட்டிட பணிகளில்தான் முறைகேடு நடந்திருப்பதாக தற்போது புதிய ஊழல் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

தேசிய மருத்துவ ஆணையம் நாடு முழுவதும் மருத்துவ கல்லூரிகளை கட்டுவதற்கு சில விதிமுறைகளை வகுத்துள்ளது. இந்த விதிகளின்படியே கட்டுமான பணிகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால் அந்த விதிகளுக்கு மாறாக எடப்பாடி பழனிசாமி வசம் இருந்த பொதுப்பணித்துறை அதிகாரிகள் மற்றும் என்ஜினீயர்கள் கட்டுமான பணிக்கு ஒப்பந்தம் வழங்கி இருப்பதாக புகார் கூறப்பட்டுள்ளது. இதற்குதுறை அமைச்சர் என்ற பெயரிலும், முதலமைச்சர் என்ற வகையிலும் எடப்பாடி பழனிசாமி ஒப்புதல் அளித்திருப்பதாகவும் இது முறைகேடான நடவடிக்கை என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதனைத் தொடர்ந்து மாநில லஞ்சஒழிப்புபோலீசார் இது தொடர்பாக விசாரணை நடத்த தமிழக அரசிடம் அனுமதி கோரி இருந்தனர். அதனை ஆய்வு செய்த தமிழக அரசு எடப்பாடி பழனிசாமி மீதான ஊழல் குற்றச்சாட்டு தொடர்பாக உரிய விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில் லஞ்ச ஒழிப்பு போலீசார் எடப்பாடி பழனிசாமிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பாக முதல் கட்ட விசாரணையை விரைவில் தொடங்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# சென்னை, அண்ணா நகரில் ராயல் ரோஸ்வாட்டர் ரெஸ்டாரன்ட் திறப்பு விழா

சென்னை , ஏப்.9-

சென்னை, அண்ணா நகர், வி.பிளாக், 4வது மெயின் ரோட்டில் ராயல் ரோஸ் வாட்டர் ரெஸ்டாரண்ட் என்ற பெயரில் புதிய உணவகம் திறக்கப்பட்டுள்ளது.

இதனை தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலைத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் அமைச்சர் பி.கே. சேகர்பாபு திறந்து வைத்தார்.





பெருநகர சென்னை மாநகராட்சியின் மேயர் பிரியா ராஜன் குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். திறப்பு விழாவில் கலந்து கொண்ட அனைவரையும் ராயல் ரோஸ்வாட்டர் ரெஸ்டாரண்டின் உரிமையாளர் ஜி.உமா புகழேந்தி வரவேற்று உபசரித்தார்.

ராயல் ரோஸ்வாட்டர் ரெஸ்டாரண்டில் சமையல் ஆலோசகராக இணைந்துள்ள சமையற்கலை வல்லுநர் கே.தாமோதரன் (தாமு) வாழ்த்துரை வழங்கினார். முன்னதாக, ராயல் ரோஸ்வாட்டர் ரெஸ்டாரண்டின் நிர்வாக இயக்குனர் மு.செல்வகுமார் அனைவரையும் வரவேற்றார். திமுக-வின் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நெ.சிற்றரசு, வில்லிவாக்கம் மேற்கு பகுதி கழகச் செயலாளர் மற்றும் 8வது மண்டல குழு தலைவர் கூ.பி.ஜெயின், அண்ணா நகர் வடக்கு பகுதி செயலாளர் ச.பரமசிவம், 103 வது வார்டு மாமன்ற உறுப்பினர் புஷ்பலதா ஜெய்சங்கர், கவிஞர் இளைய பாரதி, சட்டக்கதிர் ஆசிரியர் வி.ஆர்.எஸ்.சம்பத், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் மக்கள் தொடர்பு அலுவலர் அண்ணாதுரை, ஜி.ஆர்.டி ஹோட்டல்ஸ் நிறுவனத்தின் சமையல் கலை வல்லுநர் சீதாராமன் ஆகியோர் திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ராயல் ரோஸ்வாட்டர் ரெஸ்டாரண்டின் தலைமை பொது மேலாளர் ஆனந்த் திலீபன் நன்றியுரை ஆற்றினார்.

# தனிப்பட்ட முறையில் தனக்குத் தோன்றியதை எல்லாம் பொதுவெளியில் பேசுவதை ஆளுநர் நிறுத்திக் கொள்ள வேண்டும்

## மக்கள் நீதி மய்யம் பொதுச்செயலாளர் ஆ.அருணாச்சலம் கடும் கண்டனம்

சென்னை, ஏப்.9-

தனிப்பட்ட முறையில் தனக்குத் தோன்றியதை எல்லாம் பொதுவெளியில் பேசுவதை ஆளுநர் நிறுத்திக் கொள்ள வேண்டும் என மக்கள் நீதி மய்யம் பொதுச்செயலாளர் ஆ.அருணாச்சலம் கண்டித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "மாநிலத்தின் கண்ணியத்திற்குரிய பொறுப்பில் இருக்கும் ஆளுநர் ஆர்.என்.ரவி, மாணவர்களிடையே பேசும்போது அந்த கண்ணியம் பற்றிய கவலை சிறிதுமின்றி பேசியுள்ளார்.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையால் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு, பலரும் உயிரிழந்த சூழலில், பாதிக்கப்பட்ட மக்கள் பலகாலம் போராடினர். துப்பாக்கிச் சூட்டில் 15 பேர் உயிரிழந்த பின்னரே, ஸ்டெர்லைட் ஆலை மூடப்பட்டது. அப்படிப்பட்ட போராட்டம், வெளிநாட்டு நிதியால்தான் கட்டமைக்கப்பட்டது என்று ஆளுநர் கொச்சைப்படுத்தி பேசியுள்ளார்.



இந்திய அரசியலமைப்புச் சட்ட விதியின்படி இந்தியக் குடியரசுத் தலைவரால் பணியமர்த்தப்படும் ஆளுநர், எதிர்க்கட்சியினர் போலப் பேசுவது வேடிக்கையாக இருக்கிறது. ஆளுநர் கூறிய தகவல் உண்மையாக இருக்குமானால், மத்திய உள்துறையிடம் புகார் செய்து நடவடிக்கை எடுத்திருக்க வேண்டியது தானே? அதைவிடுத்து, மாணவர்கள் மத்தியில் பேசுவது, உண்மைக்கு மாறானதும், அவதூறு என்பதையும் அப்பட்டமாக காட்டுகிறது.

வெளிநாட்டு நிதி தொடர்பாக தான் குறிப்பிட்ட விவரங்களை, தமிழக காவல்துறைக்கோ அல்லது ஸ்டெர்லைட் துப்பாக்கிச் சூடு குறித்து விசாரணை நடத்திய நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையத்திற்கோ பகிர்ந்துள்ளாரா என்பதை ஆளுநர் விளக்க வேண்டும்.

எதிர்காலத்தில் ஐஏஎஸ், ஐபிஎஸ் போன்ற உயர் பதவிகளில் அமரப்போகும் மாணவர்கள் மத்தியில் இப்படிப் பேசுவது, மக்கள் பிரச்சனைகளுக்காகப் போராடுவோர் குறித்த எதிர்மறைப் பிம்பத்தைக் கட்டமைத்துவிடும். உரிமைகளுக்காகப் போராடும் ஜனநாயக அடிப்படையையே இந்தப் பேச்சு குழிதோண்டி புதைத்துவிடும்.

அரசியல் சாசனப் பொறுப்பில் இருந்துகொண்டு, தனிப்பட்ட முறையில் தனக்குத் தோன்றியதை எல்லாம் பொதுவெளியில் பேசுவதை இனியாவது ஆளுநர் நிறுத்திக் கொள்ள வேண்டும். அறவழியில் போராடும் மக்கள் மீது சேற்றை வாரி இறைக்கும் வகையிலும், மக்கள் உணர்வுகளை மதிக்காமலும் ஆளுநர் பேசியிருப்பதைக் கடுமையாகக் கண்டிக்கிறோம். அவர் இருப்பது ராஜ்பவன், "ரவி பவன்" அல்ல என்பதை மாண்புமிகு ஆளுநர் நினைவில்கொள்ள வேண்டும்" என கூறியுள்ளார்.



















# புதுகை வரலாறு நாளிதழ் சார்பில் நேற்று தொடங்கிய கல்வி கண்காட்சியில், கலந்து கொண்டவர்களின் கருத்துகள்

**தி.திவ்யா**
**12-ஆம் வகுப்பு.**
**அரசினர் மேல்நிலைப்பள்ளி சந்தைப்பேட்டை**
**புதுக்கோட்டை.**

அரசு பல கோடி ரூபாய்களை பள்ளிக்கல்வி,,உயர்கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்து, நம்மைப் போன்ற மாணவர்களை ஒரு அறிவார்ந்த சமூகமாக மாற்ற வேண்டும் என்று பல்வேறு திட்டங்களோடு கல்வியை நமக்குள் புகுத்துகின்றனர்.

ஆனால் நடந்து முடிந்த பொதுத் தேர்வில் அதிகமான மாணவர்கள் தேர்வுக்கு வரவில்லை என்பது வேதனைப்பட வேண்டிய விஷயம். இப்படியே போய்க் கொண்டிருந்தால் உயர்கல்வி என்பது நிறைய பேருக்கு எட்டாக்கனியாக மாறிவிடும். என்னுடைய பெற்றோர்கள் படித்த காலத்தில் இது போன்ற கல்வி கண்காட்சி எல்லாம் இல்லாமல், போயிருக்குமே என்று எனக்குள் கவலை பட்டுக் கொள்கிறேன். அரசு சார்ந்து பள்ளியில் எவ்வளவு தான் கலை நிகழ்ச்சிகள் நடத்தினாலும், ஒரு நாளிதழ் மூலமாக நடத்தப்படும் கல்விக் கண்காட்சி மாணவர்களின் கல்வித் திருவிழா என்று கூட சொல்லலாம். அந்தளவுக்கு மாணவர்களின் வருகை என்னை வியப்படைய வைத்திருக்கிறது. உயர்கல்வியை நோக்கி பயணிக்க வேண்டுமே, என்ன செய்வது, எந்தத் துறையை தேர்ந்தெடுப்பது, போன்ற தடுமாற்றத்தில் இருந்தேன். ஆனால் அந்த தடுமாற்றம் இப்போது காணாமல் போய்விட்டது.

நான் ஒரு மாவட்ட ஆட்சியரோ அல்லது, மாவட்டக் காவல் கண்காணிப்பாளராகவோ வரவேண்டும் என்பதுதான் என்னுடைய இலக்கு. அப்படிப்பட்ட இலக்கை எனக்குள் உருவாக்கி வைத்துள்ளேன். தேர்வு முடிவுகள் வெளியாகும் போது, நல்ல மதிப்பெண் பெறுவேன் என்ற நம்பிக்கையுடனும்,






காத்திருக்கிறேன்


**எஸ் சிவராஜன்**
**12-ம் வகுப்பு**
**அரசு மேல்நிலைப்பள்ளி ஆவுடையார் கோவில்.**

இந்த வயதில் சுறுசுறுப்பு இல்லாவிட்டால் வேறு எந்த வயதில் வரப்போகிறது. அதனால் எங்களுடைய ஆசிரியர் மூலமாக நாங்கள் 16 மாணவர்கள் ஒன்று சேர்ந்து, இங்கே வருகை தந்திருக்கிறோம் சோம்பேறித்தனம் வந்தால் எந்த மாணவர்களும் முன்னேற முடியாது. உதாரணத்திற்கு இங்கே நடக்கும் கல்விக் கண்காட்சியை திங்கட்கிழமை வந்து பார்க்கலாம் என்று நினைத்தால் அது முடியாது. தேர்வு நடக்கிற போது எழுத வேண்டும், கண்காட்சி நடக்கிற போது பார்க்க வேண்டும். ஆகவே இரண்டும் ஒன்று தான். தேர்வில் வெற்றி பெறுவதும், சிறந்த கல்லூரியை தேர்ந்தெடுப்பதும் ஒன்று தான். இரண்டுமே நமக்கான தனிப்பட்ட அடையாளம். பள்ளி வாழ்க்கை என்பது பறவை போன்றது, கல்லூரி வாழ்க்கை என்பது காவியம் போன்றது, பறவையாக பறந்து திரிந்த நாம் அடுத்து காவியம் படைக்க வேண்டும். அதற்கான முதல் படிக்கட்டு தான் இந்த கல்விக் கண்காட்சி.

**விஜயவர்மன்**
**12-ஆம்.வகுப்பு**
**அரசு மேல்நிலைப்பள்ளி கந்தர்வகோட்டை.**

என்னைப் போன்ற மாணவர்களுக்கு அண்மையில் நடந்து முடிந்த பொதுத்தேர்வு வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை




தான். ஆனால் அந்த திருப்பு முனை மீண்டும், மீண்டும் நமக்கு வெற்றியைத் தரவேண்டும் என்றால், உயர்கல்வியில் சிறந்த துறையைத் தேர்ந்தெடுக்க வேண்டு;ம். இணையத்தில் எல்லாவற்றையும் பற்றித் தெரிந்து கொள்ளலாம். என நினைத்துக் கொண்டு நாம் சில துறைகளை தேர்ந்தெடுப்போம். ஆனால் முதல் பருவத் தேர்விலேயே நம்முடைய கனவெல்லாம், களைந்து விடும். ஏனென்றால், இணையத்தை நம்பி நாம் எடுத்த துறை நமக்கு கைக் கொடுத்திருக்காது.

நீங்கள் ஒரு முடிவை எடுப்பதற்கு முன் பல சாத்தியங்கள் உங்கள் முன் வைக்கப்படுகின்றன. அவற்றைப் பரிசீலித்து எது உகந்தது என்று தேர்தெடுக்கிறீர்களே அது தான் சிறந்த முடிவு. மன இறுக்கம் உள்ளபோது, அவசரத்திலோ, தெளிவற்ற மனநிலையிலோ, அச்சத்திலோ, நிர்பந்தத்திலோ ஒரு முடிவை எடுக்காதீர்கள். நூறு பேரிடம் ஆலோசனைகள் கேளுங்கள், ஆனால் முடிவெடுப்பது நீங்கள் தான் என்பதை ஒரு போதும் மறந்து விடக்கூடாது. தொடர்ந்து கற்றுக் கொண்டே இருப்பவர்களின் வளர்ச்சி தடைப்படுவதில்லை. அவர்கள் ஒரு சிகரத்தைத் தொட்டதும் அதற்கு மேலே உள்ள இன்னொரு சிகரத்தைத் தொடும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள். தினமும் புதிதாய் ஒன்றைக் கற்பவர் புதிதாய் ஒன்றைச் செய்கிறார். கற்பது அறிவையும், தெளிவையும் வழங்குவதோடு உங்கள் எல்லைகளை விரிவுப் படுத்துகிறது.

**ஐஸ்வர்யா**
**12-ம் வகுப்பு**
**அரசு மேல்நிலைப்பள்ளி, கொத்தமங்கலம்.**

நாங்கள் 6மாணவிகள் ஒன்று சேர்ந்து இங்கே வருகை தந்திருக்கிறோம். அப்பா விவசாயம் பார்க்கிறார், நிறைய இடங்களில் இப்போது விவசாயம் என்றாலே என்னவென்று தெரியாமல் போய்விட்டது. அதனால் நானும் வேளாண்மை அறிவியல் சார்ந்த படிப்பு தான் தேர்ந்தெடுத்து படித்துக் கொண்டிருக்கிறேன். முதல் மதிப்பெண் பெற்றவர்கள்தான் வாழ்க்கையில் முன்னேறுவார்கள், அதிக மதிப்பெண் வாங்கியவர்கள் தான் அனைத்து வசதியான வாழ்க்கையையும் வாழ்வார்கள் எனும் தவறான மனப்போக்கை மாணவர்கள் மனதில் விதைக்காமல், உனக்குப் பிடித்த துறையைத் தேர்வு செய் என்று பெற்றோர்கள் அறிவுறுத்தும் தருணம் இது.

பள்ளிக்கல்வியை முடித்து உயர்கல்விக்குச் செல்லும் மாணவர்கள் முதலில் உயர் கல்வியில் என்னென்ன துறைகள் இருக்கிறது என்று தெரிந்து கொள்வது மிக அவசியம். இங்கே ஒவ்வொரு துறை ரீதியாக பலவிதமான பட்டப்படிப்புகள் சார்ந்த கல்விக்கண்காட்சி இடம் பெற்றுள்ளது.

மகளிர் கல்லூரியின் இயக்குநர் மற்றும் சமூக ஆர்வலர் முனைவர் மா.குமுதா கூறியது-

இன்று எல்லாத்துறையிலும் அதிகமான வேலை வாய்ப்புகள் கொட்டி கிடக்கிறது, ஆனால் அதற்கான தகுதியைத்தான் நாம் வளர்த்துக் கொள்ளவில்லை. படிக்கும் போதே சம்பாதிக்கும் அளவிற்கு இன்று பல துறைகள் உள்ளது. நான் கலை அறிவியல் கல்லூரியில் பணியாற்றுவதால் சிலவற்றை மாணவர்களுக்கு எடுத்துரைப்பது என்னுடைய தலையாய் கடமை.

பி.எஸ்.ஸி.- இயற்பியல் படித்து, எம்.எஸ்.ஸி. படித்தால் அரசு நிறுவன்ஙகளில் விஞ்ஞானியாக பணிபுரியலாம். ஆராய்ச்சித்துறையில் அதிக வேலை வாய்ப்புகள் உண்டு. வேதியிலில் மருந்து தயாரிப்பு குறித்த பணியிலும், அதே நேரத்தில் எம்.எஸ்.ஸி. முடித்து, சி.எஸ்.ஐ.ஆர். தேர்வில் தேர்ச்சியடைந்தால், நல்ல ஊதியத்துடன் பணி நிச்சயம்.

பி.ஏ.பொளாதாரம், வரலாறு போன்றவை டிகிரியாக கருதப்படும் அதேவேளையில். மேற்கொண்டு இதே துறையில் படித்தால் விற்பனை, பொருளாதாரம், வர்த்தகம் போன்ற துறையில் வேலை வாய்ப்பைப் பெறலாம். இவைதவிர மொழிப்பாடங்களான பி.ஏ.ஆங்கிலம் சேர்ந்து அவற்றிலேயே முதுகலையும் முடித்து, எம்.ஃபில் பட்டம் பெற்று ஆசிரியராகப் பணிபுரியலாம். அரசு நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றால் உயர்ந்த பணிக்கு செல்லலாம். அரசு மற்றும் தனியார் கல்வித்துறைகளில் வேவை வாய்ப்பு அதிகமுள்ள படிப்பு இது. ஊடகத்துறையில் விருப்பம் உள்ளவர்கள் பி.ஏ.ஊடகத்துறை, பி.எஸ்.ஸி. விஷீவல் கம்யூனிகேஷன், மாஸ் கம்யூனிகேஷன், எலக்ட்ரானிக்ஸ் மீடியா, ஜர்னலிசம் படிப்பில் சேர்ந்து படிக்கலாம். ஆங்கிலப் புலமையும், கற்பனைத் திறனும், அறிவுத் திறனும் இருந்தால் ஊடகத்துறையில் சிறந்து விளங்கலாம்.

12-ஆம் வகுப்பில் வணிகம், கணக்குப் பிரிவு படித்த மாணவர்கள், வருங்காலத்தில் சி.ஏ.முடித்து ஆடிட்டராக வேண்டும் என்ற மாணவர்களின் முதல் தேர்வு பி.காம். படிப்புதான். அதைத் தொடர்ந்து சில தேர்வுகளில் தேர்ச்சி பெற்றால் மருத்துவர். பொறியாளருக்கு இணையான பணியும், ஊதியமும் கிடைக்கும். உயர்ந்த நிறுவனங்களில் கணக்காளராக பணிபுரியும் வாய்ப்பு அதிகம். முன்பெல்லாம் பட்டப்படிப்பை முடித்த பிறகுதான் இதர தேர்வுகளுக்கு முயற்சி செய்யமுடியும். ஆனால் தற்போது பட்டப்படிப்பு படிக்கும்போதே இந்தப் பயிற்சிக்கான தொடக்க நிலை தேர்வுகளையும் எழுதுவதால் காலம் வீணாவதில்லை.

பிபிஏ எனப்படும் மேலாண்மை படிப்பு பெரிய நிறுவனங்களில் விற்பனை மற்றும் விளம்பரப் பிரிவில் வேலைவாய்ப்பை உருவாக்கித் தரும். இதைத் தொடர்ந்து எம்பிஏ முடித்தால் வெளிநாடுகளிலும், பன்னாட்டு நிறுவனங்களிலும் பணி புரியலாம். தொழில் முனைவோராகவும், மற்றவர்களுக்கு தொழில் சார்ந்த பயிற்சிகளையும் வழங்கலாம்.

உலகம் கணினி மையம் என்பதால் கணினித் துறையில் ஆர்வம் இருப்பவர்கள் பி.சி.ஏ, பி.எஸ்.ஸி கணினி அறிவியல் கல்வியில் சேரலாம். ஐடி எனப்படும் தகவல் தொழில்நுட்பத் துறையில் அதிக வேலைவாய்ப்புகள் இந்தத் துறைக்கு வந்து கொண்டே இருக்கின்றன. மேலும் எம்.எஸ்.ஸி முடித்தால் பொறியாளருக்கு இணையான ஊதியத்தையும் ஐடி துறையில் பெறலாம் என்பது குறிப்பிடத்தக்கது இது போன்ற அனைத்து துறைகளிலும், சாதிக்க வாய்ப்பும், வாழ்க்கைக்கான வழிகாட்டியும் அமையும் என்றார்.

**சிறப்பு தொகுப்பு-**
**பொ.ஜெயச்சந்திரன்.**
**திருவரங்குளம்.**

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# தென் தமிழகத்தையே குலுங்க வைத்த

புதுகை
# வரலாறு
நாளிதழ்

## கல்விக் கண்காட்சி






## புதுக்கோட்டையில் இன்று நிறைவடைகிறது

## மாணவர்களுக்கு லேப்டாப் பரிசு

**இடம்: விஜய் பேலஸ், புதுக்கோட்டை**

**தொடர்புக்கு : 98420 98534 / 63833 51422**

சென்னை / புதுக்கோட்டை | 09.04.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ராகுல சாங்கிருத்யாயன் , இந்திய மொழியியலாளர் (பி.1893) (இ.1963)



முசிரி சுப்பிரமணிய ஐயர் , கர்நாடக இசைப் பாடகர் (பி.1899) (இ.1975)




சாம் ஆரிசு , அமெரிக்க எழுத்தாளர், மெய்யியலாளர், அறிவியலாளர் (பி.1967)




## இன்றைய நினைவு நாள்

நிக்கோ பிரொசுமானி , சியோர்சிய ஓவியர் (பி.1862) (இ.1918)



பிராங்க் லாய்டு ரைட் , அமெரிக்கக் கட்டிடக் கலைஞர் (பி.1867) (இ.1959)



தோரித் கோப்லீட் , அமெரிக்க வானியலாளர் (பி.1907) (இ.2007)



எடின்பரோ கோமகன் , இளவரசர் பிலிப், (பி.1921) (இ.2021)



புதுகை
# வரலாறு நாளிதழ் நடத்தும்
# கல்வி கண்காட்சி

ஏப்ரல் 08,09
சனி, ஞாயிறு
2 நாட்கள்

5-ம் ஆண்டு

10 & +2
மாணவர்களுக்கான
உயர்கல்வி வழிகாட்டி
நிகழ்ச்சி

இடம் : விஜய் பேலஸ் A/C
புதுக்கோட்டை
நேரம் : காலை 8.00 மணி முதல்
இரவு 8.00 மணி வரை

அனைவரும் வாருங்கள்
அனுமதி இலவசம்

**முன்னணி கல்வி நிறுவனங்கள் பங்குபெறும் பிரம்மாண்டமான கண்காட்சி**

வரலாற்று சிறப்பு மிக்க நம்முடைய புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த **மாணவ கண்மணிகள்** அரசு பொதுத்தேர்வை எழுதிக் கொண்டிருக்கக்கூடிய இச்சூழலில் அவர்களின் **உயர்கல்விக்காக தமிழ்நாட்டில்** மட்டுமில்லாமல் **அண்டை மாநிலங்களில்** இருக்கக்கூடிய பிரபல **முன்னணி கல்வி நிறுவனங்கள்** ஒரே இடத்தில் சங்கமிக்கும் **உயர் கல்விக்கு வழிகாட்டும் இத்திருவிழாவை** கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டு தங்களின் ஆசியுடன் சிறப்பாக நடத்த உள்ளோம். இந்த நிகழ்ச்சியில் **10** மற்றும் **12** ஆம் வகுப்பு மாணவர்கள் தங்கள் **பெற்றோர்,** மற்றும் **உறவினர்களுடன்** பங்கேற்று தங்களுக்கு உண்டான அனைத்து சந்தேகங்களையும் கண்காட்சியில் பங்கேற்கும் சம்பந்தப்பட்ட **துறை வல்லுனர்களுடன்** கலந்துரையாடி உரிய தீர்வுகளை பெற்று **தலைசிறந்த கல்வி நிறுவனத்தில் தங்களுடைய உயர்கல்வி கனவை துவங்கி எதிர்கால இந்தியாவை உலக அரங்கில் தலை நிமிரச்செய்திட வாரீர்**

தங்களை மகிழ்விக்க வரவேற்றுக் காத்திருக்கின்றோம் !
வாருங்கள் நேரில் சந்திப்போம்!

இரண்டு நாட்களும் மாலை 5 மணி முதல் இரவு 8 மணி வரை **மாணவ, மாணவியரின்** தனி மற்றும் குழுவினர் (ஆண், பெண் தனித்தனியாக) **பாட்டு, நடனம் உள்ளிட்ட கலை விழாக்கள்** நடைபெறும். இதில் பங்கேற்க விரும்புவோர் ஏப்ரல் 8-ம் தேதி சனிக்கிழமை **காலை 8.00 மணி முதல் 11.30 மணி வரையில் கண்காட்சி** நடைபெறும் இடத்தில் வரவேற்பறையில் மட்டும் பதிவு நடைபெறும். பயன்படுத்திக் கொள்ளுங்கள் மேடையேறும் அனைவருக்கும் ரொக்கப் பரிசு காத்திருக்கின்றது.

மாணவர்களுக்கான சந்தேகம் மற்றும் ஸ்டால் புக் செய்ய
**98420 98534**
**63833 51422**
**88381 73645**
**97154 54081**

அதிர்ஷ்டசாலிகளுக்கு
## லேப்டாப் பரிசு



நடப்பு ஆண்டு +2 தேர்வு எழுதியுள்ள மாணவ கண்மணிகள் நேரில் வருவோரின் வருகையை மட்டும் பதிவு செய்து கொண்டு குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்படும் **மூன்று** நபர்களுக்கு மதர் தெரசா கல்வி நிறுவனம் சார்பில் **லேப்டாப்** பரிசளிக்கப்படும்

+2 மாணவ செல்வங்கள் மட்டும் அடையாள அட்டை & ஹால் டிக்கெட் நகல் ஒன்றை கொண்டு வர வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு **மார்ச் மாதம் 27** -ஆம் தேதிக்கு பிறகு, வரலாறு நாளிதழ்
www.varalaruu.com இணையதளத்தை பார்க்கவும்.

கண்காட்சியில் கலந்து கொள்ளும் அனைத்து மாணவ செல்வங்களுக்கும் வரலாறு நாளிதழ் வழங்கும் ஆச்சரியமூட்டும் அன்பளிப்பு காத்திருக்கின்றது.

நிகழ்ச்சியை இணைந்து நடத்துவோர்

SR BLUE METALS
SR புளு மெட்டல்ஸ்

பேக்கரி மஹாராஜ்
புதுக்கோட்டை

முத்துமீனாட்சி மருத்துவமனை
புதுக்கோட்டை

விஜய் நிறுவனங்கள்
புதுக்கோட்டை

ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ்

KMS HAKKIM
kalyana biriyani
PUDUKKOTTAI BRANCH
புதுக்கோட்டை